விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 10 வியாழக்கிழமை (22.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 065

# தேசிய அரசாங்கம் தொடர்ந்து நீடிக்கும்

## இரு பிரதான கட்சிகளும் நாடாளுமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து அமைத்த தேசிய அரசாங்கம் தொடர்ந்து நீடிக்கும் என இரண்டு பிரதான கட்சிகளும் நேற்று நாடாளுமன்றத்தில் கூட்டாக அறிவித்துள்ளன. (23ஆம் பக்கம் பார்க்க)

ஊழல் மோசடியை விசாரிக்க

## 2 வாரங்களில் 3 விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

கடந்த காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பிலான வழக்குகளை விசாரணை செய்வதற்கு விசேட நீதிமன்றம் மூன்றை அடுத்து வரும் இரு வாரங்களில் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை 24

## பெற்றோலுக்கு தட்டுப்பாடு?

(கொழும்பு)

நாடு முழுவதிலும் இன்று வியாழக்கிழமை மீண்டுமொரு எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் அபாயம் காணப்படுகின்றது.

கொழும்பு கொலன்னாவ எரிபொருள் களஞ்சியப் பகுதியிலுள்ள ஊழியர்களது சம்பள உயர்வு கோரிக்கை இன்றைய 24

## பிரதமர் பதவியை மகிந்தவுக்கு வழங்கினால் ஆட்சியமைப்போம்

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த கூட்டு எதிரக்கட்சி சந்தர்ப்பத்தை கேட்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமைச்சர் சுசில்பிரேமஜயந்தவின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதியை சந்தித்ததாக 23

## தேசிய அரசாங்கத்தின் உடன்படிக்கையை வெளிப்படுத்துக

ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் தொடர வேண்டும் என்றால் மீண்டும் பாராளுமன்றத்தின் அனுமதியினை பெறவேண்டும். வாய் வார்த்தைகளின் மூலம் தேசிய அரசாங்கத்தை நீடிக்காது 23

வேலியே பயிரை மேய்ந்தது

## ஒன்பது வயது மாணவியை வன்புணர்ந்த அதிபருக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறை

### யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலையில் வைத்து 9 வயது மாணவியொருவரை வன்புணர்வுக்குட்படுத்திய பாடசாலை அதிபருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், இத் தீர்ப்பு அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாடமாக அமைய வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். 24

## கூட்டு அரசாங்கம் தொடர்பான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

### அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படுமென சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான 24



## மக்கள் நிராகரித்த போதும் ரணிலுக்கு பதவி பேராசை

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

மக்கள் நிராகரித்துள்ள போதும் பேராசை காரணமாகவே பிரதமர் அந்த பதவியை தொடர்ந்தும் வகிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 24

## தேசிய அரசை தொடர்வதில் எந்த சிக்கலும் இல்லை

### நாடாளுமன்றில் பிரதமர் அறிவிப்பு



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து முன்கொண்டு செல்வதில் எந்த சிக்கலும் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 23

## இரத்தவாந்தி எடுத்த குடும்பஸ்தர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளை முறிப்பு கிராமத்தை சேர்ந்த தர்மலிங்கம் 23

## 12 வீதத்தினால் மதுப்பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் மதுப் பாவனையானது 12 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் அரசாங் 24

## யாழிலிருந்து தியத்தலாவ சென்ற பேருந்தில் குண்டு வெடிப்பு

### இராணுவத்தினர் உட்பட 19 பேர் படுகாயம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து தியத்தலாவ இடம் நோக்கி சென்ற பேருந்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 12 படையினர் உட்பட 19 பேர் படுகாயமடைந்ததாக இராணுவம் அறிவித்துள்ளது.



(விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

## மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்கு முயற்சி

### கபே அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலையும் பிற்போடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகளவில் உள்ளதாக கபே அமைப்பு எச்சரித்துள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட்டதன் பிரதிபலனை அதனை 23

## இரா.சம்பந்தனுடன் பிரச்சினை இல்லை

### கூட்டு எதிர்க் கட்சி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விடயத்தில் இரா.சம்பந்தனுடன் தமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் 23

## மகிந்தவின் பதவியை சபாநாயகரே தீர்மானிக்க வேண்டும்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவதா, இல்லையா என்பது குறித்து சபாநாயகரே தீர்மானிக்க வேண் 23

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

# காணாமல்போனோர் தொடர்பில் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்

## சந்தியா எக்னலிகொட தெரிவிப்பு

காணாமல் போனோர் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முக்கிய கடமையாகும் என காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட காணாமல்போனோரின் உறவினர்களின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து வழங்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு பற்றி பேசப்பட்டு வருகின்றது ஆனாலும் அதற்கான வேலைத்திட்டங்கள் சரிவர முன்னெடுக்கப்படவில்லை. தமது உறவுகளுக்காக மக்கள் வீதியில் வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

தற்போதைய நிலையில் நாட்டில் உண்மையாக நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் ஜனாதிபதி காணாமல் போனோரின் உறவுகளுக்கும், ஐ.நா விற்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

அதனை விடுத்து காணாமல் போனோரை புறக்கணித்துவிட்டு இராணுவத்தினரை மட்டும் ஜனாதிபதி தொடர்ந்தும் பாதுகாத்துக் கொண்டு வருவாராயின் நாட்டில் எப்போதுமே நல்லிணக்கம் மலராது எனவும் சந்தியா எக்னெலிகொட மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை இந்த வாரத்திற்குள் மாற்றமடையும்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை இந்த வாரத்திற்குள் மாற்றமடையும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகக் குறிப்பிட்ட ராஜித, அரசாங்கத்தை மேம்படுத்தும் வகையில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலைத் தொடர்ந்து அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதன்போது பிரதமரின் பதவியையும் மாற்றுமாறு பலர் அழுத்தம் கொடுத்து வருகின்ற போதும், அரசாங்கத்திற்குள் எவ்வாறான முரண்பாடுகளும் இல்லையென செய்தியாளர் சந்திப்பில் ராஜித குறிப்பிட்டார்.

இதேவேளை, அமைச்சரவை மாற்றத்தினபோது சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு, மீள் குடியேற்ற அமைச்சு, நிதியமைச்சு உள்ளிட்டவற்றில் மாற்றம் ஏற்படப்போவதாக ஏற்கெனவே பல தகவல்கள் வெளியாகியிருந்தன. அத்தோடு, ஏற்கெனவே அமைச்சுப் பதவிகளில் உள்ளவர்கள் சிலரின் பதவிகள் நீக்கப்படவுள்ளதாகவும், புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை

## முறைப்பாட்டு அலுவலகத்துக்கு முன் உரியவர் தற்கொலைக்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

பத்திரிகை செய்தி தொடர்பில் மூன்று ஆண்டுகள் கடந்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி நபர் ஒருவர், யாழில் உள்ள பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று தற்கொலை முயற்சி மேற்கொண்ட சம்பவம் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

யாழ்.பொது நூலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரே இவ்வாறு தற்கொலைக்கு முயற்சி மேற்கொண்டவர் என்பதுடன் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் தனக்கு அவதூறு ஏற்படுத்தும் விதமாக கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் செய்தி ஒன்று வெளியாகியிருந்ததாகவும், அதுதொடர்பில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த போதிலும் அது தொடர்பில்,

எந்த விதமான நடவடிக்கையும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு எடுக்கவில்லை என்றும் அந்தச் செய்தியால் தான் மிகுந்த மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் தனது குடும்பத்தில் பிரிவு ஏற்பட்டு உள்ளது. இதற்கு பின்னர் தான் உயிருடன் வாழ விரும்பவில்லை என தெரிவித்து தன் வசம் வைத்திருந்த மண்ணெண்ணெயை ஊற்றி தீ மூட்ட முயற்சித்துள்ளார்.

அப்போது அங்கிருந்தவர்கள் தற்கொலை முயற்சி மேற்கொண்டவரை காப்பாற்றி சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ம-9)


### காணி விற்பனை

திருநெல்வேலி சிவன் கோயிலுக்கு அண்மையில் சிவன் புது வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 0771166090, 0771899685**

(2878)


# தியத்தலாவ குண்டு வெடிப்பால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## மகிந்த அணி எச்சரிக்கை

தியத்தலாவ-கஹகொல்ல பகுதியில் பஸ்ஸில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் டி சொய்ஸா எச்சரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த 9 வருடங்களுக்கு முன்னர் பஸ் குண்டு வெடிப்பு என்ற கலாசாரம் இலங்கையில் இருந்தது.

9 வருடங்களுக்கு முன்னர் கெப்பிற்றிகொல்லாவ பகுதியில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பிற்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின் அந்த சத்தம் நிறுத்தப்பட்டது.

ஆனால் நேற்று தியத்தலாவ - கஹகொல்ல பகுதியில் தனியார் பஸ் ஒன்றில் குண்டுவெடிப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்த சம்பவத்திற்கு என்ன காரணம் என்பதை நாட்டின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான பாதுகாப்பு பிரதானி வெளிப்படுத்த வேண்டும்.

இது யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பயணிகள் பேருந்து என கூறப்படுகிறது.

இந்த அபாய நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கான ஒரே வழி நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்வதேயாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# நீலகண்டனின் மறைவு பேரிழப்பு நல்லை ஆதீன முதல்வர் அனுதாபம்

இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டனின் மறைவு மிகுந்த வேதனை அளிக்கிறது என நல்லை ஆதீன முதல்வர் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எமது திருஞானசம்பந்தர் ஆதீனத்தைப் புதுப்பித்து வைத்தவர் கந்தையா நீலகண்டன். தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாகத் திகழ்ந்தவர். அன்னாரின் மறைவு கவலையைத் தருகின்றது. இந்துமா மன்றத்தின் ஆணிவேராக இருந்த தலைமைத்துவம் மறைந்து விட்டது. இலங்கையின் பல இடங்களிலும் சைவத்தை வளர்தெடுக்க முற்று முழுதாகப் பாடுபட்ட கைகளும் கால்களும் ஓய்வெடுத்துக் கொண்டன. அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இந்துமாமன்றம் எடுக்கும் எல்லா விழாக்களிலும் எம்மையும் அழைத்து கௌரவம் தந்தவர் கந்தையா நீலகண்டன். ஈழமணித் திருநாட்டிலே சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்கச் செய்த அன்னாரின் மறைவு தமிழ் மக்களுக்குத் தாங்க முடியாத ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இந்து சமயத்திற்குப் பேரிழப்பு பேராசிரியர் கலைவாணி இரங்கல்

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அவர்களது திடீர் மறைவு மிகவும் பேரதிர்ச்சியாகவுள்ளது. நான் அவரிடம் பழகிய காலம் மிகவும் குறைவு ஆனால் பழகிய சில காலங்களிலேயே அன்னாரின் பணிவான பண்பு, அமைதியான பேச்சு, மகத்தான சேவையும் உழைப்புத் திறனையும் உணர்ந்து வியந்திருக்கிறேன். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில்,

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாநாடு, நாவலர் மாநாடு, மாநாட்டு பொன்விழா மலர் வெளியீடுகள் அனைத்திலும் அன்னாரின் உயரிய மனப்பாங்கின் வெளிப்பாடுகள் உணரப்பட்டன. இந்து மதத்தை ஆழமாக நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகம்

# ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 14, டச்சுவீதி, ஆதன இலக்கம் 129 என்ற இலக்கத்தைக் கொண்டதும் கோப்பாய் தெற்கு இறைநிலப்பரப்பு 03 குழி 09.76ம் கொண்ட கிராமசேவையாளர் பிரிவு: J/259, கல்வியங்காடு, கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் ஆசைப்பிள்ளை வீரசிங்கம் என எமது ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை வீரசிங்கம் பெயரில் நிறைவேறிய உறுதி யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட வன்செயல்களின் போது தொலைந்துவிட்டது என்றும் குறித்த விபரங்கள் ஒன்றும் தெரியாத காரணத்தினால் அதன் இணைப் பிரதி ஒன்றை யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் பெற்றுக் கொள்ளமுடியாதென்றும் தங்கள் பிதா வழி முதுசமாக தங்களுக்கு வந்தடைந்தது என்று ஆசைப்பிள்ளை வீரசிங்கத்தின் பிள்ளைகளான வீரசிங்கம் தேவராசா, வீரசிங்கம் இராசசிங்கம், வீரசிங்கம் சிவசிங்கம் ஆகிய 3 பேரும் வீரசிங்கம் குணசிங்கம் எனும் சகோதரனுக்கு நன்கொடை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் 3ஆம் கட்டை ஆறுமுகம்லேன் வீரசிங்கம் தேவராசாவும், யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கு டச்சுறோட்டு, தற்போது சுவிற்சிலாந்தில் வசிக்கும் வீரசிங்கம் இராஜசிங்கமும் (தத்துவக்காரர் வீரசிங்கம் தேவராசா மூலம்) வீரசிங்கம் சிவசிங்கம் ஆகியோர் தங்கள் சகோதரன் கோப்பாய் தெற்கு டச்சுறோட்டு 129ஆம் இலக்கத்தில் வசிக்கும் வீரசிங்கம் குணசிங்கத்திற்கு பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் அவர்களால் எழுதப்பட்ட 15410 இலக்க 2016.09.12ஆந் திகதிய நன்கொடை உறுதிமூலம் இவ் ஆதனத்தை இல 01, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரசிங்கம் குணசிங்கம் என்பவர் கோப்பாய் தெற்கு இறை "ஆட்டுப்பட்டி" நிலப்பரப்பு 03 குழி 09.76ம் உரிமை கோருகின்றார்.

மேற்படி"ஆட்டுப்பட்டி" நிலப்பரப்பு 03 குழி 09.76க் எல்லைகள்

**கிழக்கு**:-இராஜசேகரம் மகள் லைலாராணியின் ஆதனம்,

**வடக்கு**:-பொன்னையா கந்தசாமிக்கும், நாகேந்திரம் உமாபதிக்குமுரிய ஆதனங்கள்,

**மேற்கு**:-றோட்டு (ஜி.பி.எஸ்.றோட்டு),

**தெற்கு**:-நாகலிங்கம் கணேசலிங்கத்திற்கும், தணிகைநாதன் பெண் சாரதாமணிக்கும், வீரசிங்கம் தேவராசாவுக்கும் உரியஆதனங்கள். அவ் ஆதனத்தில் இருக்கும் கிணற்றிலும், துலாதுார்வையிலும் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும் வீடும் பயிர்வகைகளும் உள்ளதென்று 29.08.2016ஆந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.ரி.பாலசுப்பிரமணியம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 302 ம் இலக்க படத்தில் துண்டு 1 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனத்தை வீரசிங்கம் குணசிங்கம் என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 2018.03.22ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது வீரசிங்கம் குணசிங்கம் என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ் விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதை அறியத்தருகின்றேன்.

**யு.ஜெலீபன்**
**செயலாளர்.**
வலிகிழக்கு பிரதேச சபை, புத்தூர். (சி-1673) 2018.02.22


# பேருந்தில் குண்டுவெடிப்பு!

## 17 பேர் படுகாயம்; தென்னிலங்கையில் பரபரப்பு

## யாழிலிருந்து சென்ற இராணுவம் மீது சந்தேகம்?












(கொழும்பு)

பண்டாரவளையிலிருந்து எபரவ கிராமத்தை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று நேற்று அதிகாலை திடீரென வெடித்து எரிந்தது.

பண்டாரவளை தியத்தலாவ பிரதான வீதி, கஹகொல்ல பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 5.30 மணியளவில் குறித்த பேருந்து திடீரென வெடித்து தீப்பற்றிக் கொண்டது. இதன்போது குறித்த பேருந்தில் பயணித்த 17 பேர் படுகாயமடைந்த நிலையில் தியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தினரும் ஆய்வு நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆய்வின்போதே பேருந்து வெடித்தமைக்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பேருந்தினுள் இருந்து கைக்குண்டு ஒன்று வெடித்தமைக்கான தடயாங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து விடுமுறையில் வீடு நோக்கிப் பயணித்த இராணுவத்தினரும் அந்தப் பேருந்தினுள் இருந்தமையால் அவர்களில் யாராவது ஒருவர் கொண்டு வந்த கைக்குண்டே இவ்வாறு வெடித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கணிசமானளவு இராணுவத்தினரும் படுகாயமடைந்துள்ளனர். இந்த நிலையில் இது குறித்த விசாரணைகளை பண்டாரவளை மற்றும் தியத்தலாவை ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இலங்கையின் இராணுவச் சட்டத்தின்படி விடுமுறையில் செல்கின்ற இராணுவ உறுப்பினர் தம்முடன் இராணுவத் தளபாடங்களையோ ஆயுதங்களையோ கொண்டு செல்வது சட்டவிரோதமான செயலாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-9)

## வடமாகாணத்தில் 2017 இல் மட்டும் சிறுவர் மீது துஷ்பிரயோகம் குறித்து 2 ஆயிரத்து 487 வழக்குகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் சிறுவர் மீது துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக 2 ஆயிரத்து 487 வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள புள்ளி விபரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிறுவர் மீது மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேச நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் 1027 வழக்குகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 114 வழக்குகளும் மன்னார் மாவட்டத்தில் 489 வழக்குகளும், வவுனியா மாவட்டத்தில் 677 வழக்குகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 180 வழக்குகளுமாக மொத்தம் 2487 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மேற்குறித்த புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அதிகபடியான வழக்குகள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (இ-9)

## ஆறு மாதத்திற்குள் அரசிற்கு எதிராக நாடு முழுவதும் பேரணி நடத்த கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் நாடு முழுவதும் பொதுமக்களை இணைத்து பேரணிகளை நடத்த கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பெற்றுள்ள வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளவும், அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் வெறுப்பை தமக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் இதன் மூலம் கூட்டு எதிர்க்கட்சி உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளும் பொது மக்கள் பேரணிகள் எதிர்வரும் ஆறு மாதகாலப் பகுதிக்கு தொடர்ச்சியாக நாடு முழுவதும் நடைபெறவுள்ளன.

அத்துடன் கொழும்பிலும் குறுகிய கால அவகாசமொன்றில் பொதுமக்களை திரட்டி பொது மைதானம் ஒன்றில் மாநாடு ஒன்றை நடத்தவும் கூட்டு எதிர்க்கட்சி உத்தேசித்துள்ளது.

இவ்வாறான பேரணிகள் ஊடாக கூட்டு எதிர்க்கட்சியினருக்கு நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக் கொள்வதற்கான பொதுமக்கள் அழுத்தமொன்றை உருவாக்கவும் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது. (இ-7)

## "சுனாமி ஓய்ந்த பின்னர் ஒரேயடியாக சுத்தமாகாது"

### அரசியல் நெருக்கடி தொடர்பாக அமைச்சர் ராஜிதவின் பதில் இது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "சுனாமி ஓய்ந்த பின்னர் ஒரேயடியாக சுத்தமாகாது தானே? அதுபோன்று இப்பிரச்சினையும் படிப்படியாக தீரும்" என அமைச்சர் ராஜித சேனாரட்ன பதிலளித்துள்ளார்.

அரசாங்கத்தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் நாட்டில் அரசியல் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

ஆரம்பத்தில் இரு பிரதான கட்சிகளும் தனித்து ஆட்சியமைப்பது தொடர்பாக தீவிரம் காட்டி வந்தன. எனினும், அண்மைய பேச்சுவார்த்தைகளின் பின்னர் இரு கட்சிகளும் இணைந்து தொடர்ந்தும் கூட்டரசாங்கத்தை தொடருமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கூட்டரசாங்கத்தை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வது தொடர்பாக தனக்கு எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்பும் கிடைக்கவில்லையென கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரிகேடியர் பிரியங்க ஏன் இலங்கைக்கு வருகிறார்?

### இராணுவ ஊடகப் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக செயற்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை இலங்கைக்கு அழைத்தமைக்கான காரணத்தை இராணுவ ஊடகப்பேச்சாளர் சுமித் அத்தபத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.



இதில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ நாடு திரும்பவுள்ளமை குறித்து ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த இராணுவ ஊடகப்பேச்சாளர்,

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களின் கழுத்தை அறுத்து விடுவேன் என பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ சைகை காட்டியதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் கேட்டு அறிவதற்காகவே பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

(மற்றுமொரு செய்தி உள்ளே) (இ-7)

### முத்தரப்பு ரி20 தொடர்

# அவுஸ்திரேலியா சம்பியன்

## தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தும் அசத்தல்






முத்தரப்பு 'ரி20' தொடரில் அவுஸ்திரேலிய அணி கிண்ணம் வென்றது. இறுதியில் நியூசிலாந்து அணியை 'டக்வொர்த் - லூயிஸ்' விதிப்படி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய முத்தரப்பு 'ரி20' தொடரின், இரண்டாவது சுற்றுப் போட்டிகள் நியூசிலாந்தில் நடந்தன.

ஆக்லாந்தில் நேற்று நடந்த இறுதியில் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**ரெய்லர் ஆறுதல்**

நியூசிலாந்து அணிக்கு கப்டில் (21), முன்ரோ (29) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. அஷ்டன் ஏகர் 'சுழலில்' அணித் தலைவர் வில்லியம்சன் (9), மார்க் சப்மன் (8) சிக்கினர். கிராண்ட்ஹோம் (10), சான்ட்னர் (0) அணியை கைவிட்டனர். ரோஸ் ரெய்லர் மட்டும் ஆறுதல் அளித்தார்.

20 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை எடுத்தது.

ரெய்லர் (43), போல்ட் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் அதிக பட்சமாக ஏகர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**அபார ஆரம்பம்**

எளிய இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், ஷோர்ட் சிறப்பான அடித்தளம் அமைத்தனர். போல்ட் வீசிய 5 ஆவது ஓவரில் அசத்திய ஷோர்ட் இரண்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் விளாசினார்.

முதல் விக்கெட்டுக்காக இவ் இணை 72 ஓட்டங்களை சேர்த்தபோது, அரைசதம் அடித்த ஷோர்ட் (50) வெளியேறினார். அணித் தலைவர் வோர்னர் 25 ஓட்டங்கள் எடுத்தார். சான்ட்னர் 'சுழலில்' ஏகர் (2) சிக்கினார்.

அவுஸ்திரேலிய அணி 14.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது.

மழை தொடர்ந்ததால், அவுஸ்திரேலிய அணி 'டக்வொர்த்-லூயிஸ்' விதிப்படி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மக்ஸ்வெல் (20), பின்ச் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளை முறையே அவுஸ்திரேலியாவின் அஷ்டன் ஏகர், கிளென் மக்ஸ்வெல் வென்றெடுத்தனர்.

இவ்வெற்றிமூலம், கிண்ணம் வென்ற அவுஸ்திரேலிய அணி முதல் முறையாக 'ரி20' போட்டிக்கான தரவரிசையில் 'நம்பர்-1' இடத்தை பாகிஸ்தானுடன் பகிர்ந்து கொண்டது.

# உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஹோலி

## கிரேம் ஸ்மித் புகழாரம்




உலகின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் விராட் ஹோலி என தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் அணித்தலைவர் கிரேம் ஸ்மித் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் அணித் தலைவர் கிரேம் ஸ்மித் கூறியதாவது.

விராட் ஹோலியின் ஆட்டம் வியக்கும் வகையில் இருக்கிறது. அவர் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர். அவரது உணர்ச்சிவசம் தான் சிறந்த ஆட்டத்தை வெளிபடுத்துவதாக நினைக்கிறேன். அது மற்றைய வீரர்களுக்கும் ஊடுருவி இருக்கலாம். ஆனால் ஹோலி தனது உணர்ச்சிவசத்தை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.


வெளிநாட்டு மண்ணில் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற மனநிலையை அணிக்கு ஏற்படுத்தி வழி நடத்திச் செல்கிறார். நீண்ட நாட்கள் இந்தியா முதலிடத்தில் இருக்கும். ஹோலி மிகப்பெரிய சாதனைகள் புரிவார் என்றார்.



தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று செஞ்சூரியனில் நடைபெற்ற 2ஆவது ரி20 போட்டியில் 28 பந்துகளில் 52 ஓட்டங்களைக் குவித்த தோனியின் அதிரடிகளில் ஒன்று

# சென்னை அணிக்கு கிண்ணம்

# இது ஹர்பஜனின் விருப்பம்




ஐ.பி.எல்., தொடரில் இம்முறை சென்னை அணி கிண்ணம் வெல்ல விரும்புகிறேன்என ஹர்பஜன சிங் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்., தொடருக்கான 11ஆவது சீசன் எதிர்வரும் ஏப். 7ஆம் திகதி தொடங்குகிறது. சமீபத்தில் முடிந்த வீரர்கள் ஏலத்தில் சீனியர் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் சென்னை அணியில் ஒப்பந்தமானார். இவர், கடந்த 10 சீசனில் மும்பை அணிக்காக விளையாடினார்.

**ஹர்பஜன் கூறியது**

ஐ.பி.எல்., தொடருக்கான இந்த சீசனில் சென்னை அணிக்காக விளையாட இருப்பது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் அணியின் தலைவராக தோனி உள்ளார். இவர், ஒவ்வொரு போட்டியிலும் சூழ்நிலைக்கு ஏற்ப பந்துவீச்சு, களத்தடுப்பு வியூகம் வகுக்கிறார். இதனால் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்று சிறந்த அணித் தலைவராக ஜொலிக்கிறார்.

சர்வதேச போட்டிகளில் தோனியுடன் இணைந்து விளையாடி உள்ளேன். தற்போது மீண்டும் வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இம்முறை சென்னை அணி கிண்ணம் வென்று சாதிக்க விரும்புகிறேன். இதற்காக என்னால் முடிந்த பங்களிப்பைக் கொடுப்பேன்.

கடந்த 10 சீசனில் மும்பை அணிக்காக விளையாடினேன். மும்பை, சென்னை என இரண்டு அணிகளும் சம பலத்தில் உள்ளன. இரு அணிகள் மோதும் போட்டியில் ஒருவித நெருக்கடி இருக்கத்தான் செய்யும். இரு அணிகளும் வெற்றிக்காக கடைசி பந்து வரை போராடக்கூடியவை. இம்முறை முதல் போட்டியில் மும்பை அணியை எதிர்கொள்ள இருப்பது சுவாரஸ்யமானது. இவ்வாறு ஹர்பஜன் கூறினார்.

# சதுரங்க போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகள் சதுரங்க சங்கத்தின் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தனியாள் சதுரங்கப் போட்டிகள் எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் 7,9,11,13, 15,17,20 வயதுப் பிரிவுகளில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் பொறுப்பாசிரியர் ஊடாக 0767999005 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து 23.02.2018 வெள்ளிக்கிழமை தம்மை போட்டியாளராக பதிவு செய்து கொள்ளுமாறு இலங்கைப் பாடசாலைகள் சதுரங்க சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ம)

# மாவிலித்துறையில் புதிதாக கட்டப்பட்ட இறங்குதுறை நேற்றுத் திறந்து வைப்பு








சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் நெடுந்தீவு மாவிலித்துறையில் புதிதாக கட்டப்பட்ட இறங்குதுறை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) சு.முரளிதரன், வடமாகாண கடற்படைத் தளபதி, நெடுந்தீவு கடற்படை அதிகாரி மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலக கணக்காளர், உதவித் திட்டமிடற் பணிப்பாளர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடற்படையினர், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதேவேளை கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு கிழக்கு மாவிலித்துறை இறங்குதுறையில் தண்ணீர்த்தாங்கியும் அரசாங்க அதிபரால் நேற்று மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.(இ-7)

# 100 பில்லியன் ஜப்பான் யென் செலவில் மத்திய அதிவேக பாதை நிர்மாணிப்பு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

மத்திய அதிவேக வீதியின் 3ஆம் கட்ட நிர்மாணிப்பிற்கான ஒப்பந்தத்தை ஜப்பானுக்கு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை வெளியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அதிவேக வீதியின் 3ஆம் கட்டமான பொதுஹர தொடக்கம் ரம்புக்கன ஊடான கலகெதர வரையிலான 32.5 கிலோ மீற்றர் நீளமான பாதையினை நிர்மாணிப்பதற்காக மிட்சுபிஷி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்காக 100 பில்லியன் ஜப்பான் யென் நிதியினை வழங்குவதற்கும் குறித்த வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் குறித்த வீதி நிர்மாணிப்பு ஒப்பந்தத்தினை ஜப்பானின் டைசெய் (Taisei Corporation) நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனையை முன்வைத்திருந்தார்.

குறித்த யோசனையை பரிசீலனை செய்த அமைச்சரவை அதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது எனவும் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# வெளிநாட்டு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தில் தனிப் பணியகம்

## தளபதி சேனநாயக்க தகவல்




(கொழும்பு)

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளில் இராணுவத்தை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், இலங்கை இராணுவம் தனியான நடவடிக்கைப் பணியகம் ஒன்றை உருவாக்கவுள்ளது.

குருலேகங்கவில் உள்ள இராணுவத்தின் அமைதி ஆதரவு நடவடிக்கைப் பயிற்சி மையத்துக்கு நேற்றுச் சென்றிருந்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்த போது இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கை இராணுவத்தில் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான தனியான பணியகம் ஒன்றை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவத் தலைமையகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

வெளிநாடுகளில் ஐ.நா. படைகளில் படையினரை அதிகளவில் ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இந்தப் பணியகம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



வன்னியில் நடைபெற்ற இறுதிக் கட்ட போரில் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பிரதேசத்திற்குள் 2009 பெப்ரவரி மாதம் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் 9ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் எழுகலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சத்தியமூர்த்தியின் உருவப்படத்திற்கு ஈகச் சுடரேற்றி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதில் 21 ஆம் நூற்றாண்டில் தேசிய இனப்பிரச்சனையும் அதற்கான தீர்வுகளும் எனும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் நினைவுப் பேருரையாற்றினார். (படங்கள் : உ.சாளின்)

# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், வார்த்தைகளால் மற்றவர்களின் மதிப்பை பெறுவீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**இடபம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம் பெறலாம், உறவினர்கள் மனங்கோணாது நடந்து கொள்வது நல்லது, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, மற்றவர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| சூரி. சுக். புத | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை | | |
| சனி | செவ். குரு | | |

சந்திராஷ்டமம்
சுவாதி, விசாகம்
மாலை 4.49 மணிக்கு
இடப-சந்

**22.02.2018**

மாசி 10, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
சப்தமி பின்னிரவு 12.13 மணிவரை
பரணி முற்பகல் 11.42மணிவரை
சுபநேரம் 8.01-9.31 மணிவரை
இராகுகாலம் 2.01-3.31 மணிவரை
கார்த்திகை விரதம்

வளவன்

**கடகம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்:** வாகன சுகமுண்டு, சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** புதிய நபர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** தாழ்ந்த சுபாவமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்; விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கன்னி:** முக்கியமான பொறுப்புக்கள் மாலை நேரங்களில் நிறைவேற்றுவது நல்லது, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், முயற்சிகளில் கவனம் தேவை.

# விவேகமான முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுக்கல்வி பூரண விளக்க கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும்

(யாழ்ப்பாணம்)

முதலீட்டு ஆர்வலர்கள் பலரின் வேண்டுகோள்களுக்கு இணங்க கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்-கிளையானது மூலதனச் சந்தை முதலீடுகள் தொடர்பான பூரண விளக்கக் கருத்தரங்கு மற்றும் பயிற்சிப்பட்டறைக்கான "Event Calendar 2018" அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்நாட்காட்டியில் இளநிலை முதலீட்டாளர்களுக்கு (Beginners) மிகவும் தேவையான அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய பயிற்சிப்பட்டறை (workshop) மார்ச் மற்றும் ஜூன் மாதங்களின் இறுதி வார நாட்களில் ஒழுங்கு செய்துள்ளது.

இப் பயிற்சிப்பட்டறையில் அடிப்படைப் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் அடிப்படை முதலீட்டு எண்ணக்கருக்கள், நிதிக்கூற்றுக்களின் அடிப்படைகள், பங்குகளின் தெரிவு மற்றும் முதலீட்டு வழிமுறைகள் போன்ற விடயங்கள் ஆழமாக பிரதியேகமான முதலீட்டு வளவாளர்களினால் கலந்துரையாடப்படும்.

நடைமுறைப் பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகளினால் ஏற்படவல்ல மாற்றங்களை எவ்வாறு எதிர்கொள்ளுதல் மற்றும் சாதமாக மாற்றியமைத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய Current market condition கருத்தரங்கு மார்ச் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெறும்.

பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளை பல கோணங்களில் மிகவும் ஆழமாக பகுப்பாய்வு செய்ய உதவுகின்ற முதலீட்டு மதிப்பான்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்கள் தொடர்பான Fundamental analysis கருத்தரங்கு மே மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெறும்.

முதலீட்டாளர்கள் நடத்தைகளை மிகவும் துல்லியமாக எதிர்வுகூற உதவுகின்ற சில வரைபுகள் மற்றும் அட்டவணைகளின் பூரண விளக்கம் மற்றும் பிரயோகம் தொடர்பான அதாவது விலை மற்றும் தொகைகளின் அசைவுகள் பிரதிபலிக்கின்ற Line, Bar and Candle stick charts போன்றவற்றின் பிரயோகங்களை உள்ளடக்கிய Technical analysis கருத்தரங்கு மே மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெறும்.

பெரும்பாலான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் முதலீட்டாளர்களுக்கு வசதியாக வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறு தினங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. முதலீட்டுத்துறைகளில் மிகவும் அனுபவமுடைய தொழிற்தேர்ச்சி மிக்க வல்லுநர்களை வளவாளர்களாக கொண்டு மேற்குறிப்பிட்ட கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இணைந்து நடத்தப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மட்டுமே இக் கருத்தரங்குகளில் உள்வாங்கப்படுவதனால் ஒவ்வொருவரும் நிதானமாக உங்கள் கருத்துக்களை பகிர்ந்து முழுமையான பயன்பெற்றுக் கொள்ள முடியும். முன்பதிவுகளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ். கிளைகளில் மேற்கொள்ளமுடியும்.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் அல்லது Type CSE and send sms to 077 782 2014/ 077 710 5205 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வடக்கில் ஆசிரியர் இடமாற்றம் உரிய முறையில் அமையவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 2018 அமுல்படுத்துவது தொடர்பான வடமாகாணக் கல்வியமைச்சின் செயற்பாடுகள் உரிய முறையில் அமையவில்லை என்றும், அதனை விரைந்து நடைமுறைப்படுத்துமாறு கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் - வடமாகாணக் கல்வியமைச்சர் மற்றும் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2018 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படவேண்டிய ஆசிரியர் வருடாந்த இடமாற்றச் செயற்பாடானது மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலைக் காரணம் காட்டி இடமாற்றம் பிற்போடப்பட்டிருந்தது. ஆயினும் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னரும் கூட - இடமாற்றம் பெறத் தகுதியானவர்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல் கூட வெளியிடாமல், இடமாற்றச் சபையின் அங்கீகாரம் இதுவரை பெறப்படாமல் - வடமாகாணக் கல்வியமைச்சு செயற்படுவது வெளி மாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள்மட்டில் பாரிய மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பல்வேறு இழுத்தடிப்புக்களுக்கு மத்தியிலேயே ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆசிரியர்களின் நலன்கள் தொடர்பாக வடமாகாணக் கல்வியமைச்சு தொடர்ச்சியாக இதே விதமான அசமந்தப்போக்குகளையே கடைப்பிடித்து வருவது கண்டனத்துக்குரியது.

இடமாற்றம் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு தமது மேன்முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவர்களுள் தகுதியானவர்களுக்கும் உரிமை பாதிக்கப்படாது பாதுகாக்க வேண்டும். இடமாற்றம் தொடர்பான இவ்வித இழுத்தடிப்புக்கள் மேன்முறையீடு செய்வதற்கான ஆசிரியர்களின் சந்தர்ப்பத்தை இழுத்தடிப்பதற்கான செயற்பாடாக வடமாகாணக் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றதோ என்னும் நியாயமான சந்தேகம் ஆசிரியர்கள் மட்டில் எழுந்துள்ளதை தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

எனவே வருடாந்த இடமாற்றம் - 2018 இல் இடமாற்றம் பெறத் தகுதியான ஆசிரியர்களின் விபரங்கள் உடனடியாக வெளியிடப்பட்டு மேன்முறையீடுகளும் பரிசீலிக்கப்பட்டு முறையாக இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4)




# விண்ணப்ப காலம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ இளமாணி பட்டக் கற்கை நெறிக்குரிய (Bachelor of Management Studies) 2018/2019 ஆம் ஆண்டிற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 21.02.2018 என அறிவிக்கப்பட்ட போதும் விண்ணப்பதாரர்களின் நன்மை கருதி விண்ணப்பிப்பதற்கான கால எல்லை 25.02.2018 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou. ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிவலயத்தின்பின் வரும் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

1. யா/ சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலை- தரம்-II

2. யா/உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாலயம் தரம்-III

ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ் வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. தரம் II பாடசாலைக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2. தரம் III பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் III அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3. தரம் II பாடசாலைக்கு உரிய தரத்தையுடையவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4.தங்கள் அதிபர் தரத்திற்கு பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

5.இலங்கை அதிபர்சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு-7 பொருத்தமாகாது)

6. வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

7.விண்ணப்பதாரிதற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

8.விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

9. யா/ சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலைக்கு பெண் அதிபர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 04.03.2018.

11.விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்வி அலுவலகப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார்.(இ)

# உலர் உணவுப் பொதிகள் வழங்கல்



யாழ். நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு நல்லூர் சாயி சேவா சங்கத்தினர் உலர் உணவுப் பொதிகளை வித்தியாலயத்தில் வைத்து அண்மையில் வழங்கினர். (இ-78)







வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், கைவேலை அழகுக்கலை, மனைப்பொருளியல் கண்காட்சி அரியாலையில் அமைந்துள்ள சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி யோகநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். கனகரட்ணம் விந்தன் , சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. பஞ்சலிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை துணைவேந்தரும் அரியாலை சனசமூக நிலைய முன்னாள் தலைவருமான பேராசிரியர் எஸ். மோகனதாஸ், அரியாலை மத்தி ஜே/95 கிராம அலுவலர் ஆர். தவரட்ணம், நல்லூர் கிராம மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ. சண்முகலிங்கம் மற்றும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய செயலாளர் எஸ். அமிகைதனேசிகன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# புதிய பொருளாதாரக் கொள்கை அடுத்த வாரம் அறிமுகமாகும்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கை அடுத்த வாரமளவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

நாட்டுக்குத் தேவையான உடனடிப் பொருளாதார முகாமைத்துவ மாற்றங்கள் தொடர்பில் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான குறுகிய, மத்திய கால, நீண்ட கால பொருளாதாரத் திட்டங்களைக் கொண்டதாக இந்த புதிய பொருளாதாரக் கொள்கை அமையப் பெற்றிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையிலான தேசிய பொருளாதார சபையின் கலந்துரையாடலில் மேற்குறித்த விடயங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டின் பொருளாதார நலன்கள் தொடர்பான விடயங்களை கவனிப்பதற்காக தேசிய பொருளாதார சபை நிறுவப்பட்டது.

தற்போதைக்கு இந்தச் சபை நேற்று முன்தினம் அமர்வுடன் சேர்த்து எட்டு அமர்வுகளை நடத்தியுள்ளது. (இ-10)


## மணமகள் தேவை

22.06.1991 இல் பிறந்த, சித்திரை 4ம் பாதம் நட்சத்திரம், கிரகபாவம் 13 1/4, உயரம் 165cm. சுயதொழில் மாத வருமானம் 40,000/= அழகான A/L வரை படித்த மணப்பெண் தேவை.

சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. விவசாயக் குடும்பத்தவர்கள் விரும்பத்தக்கது.

(2870) தொடர்பு

T.P: 077 608 2596, 021 226 3321


# பேடன் பவல் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மாவட்ட கிளைச்சங்கம் நடத்தும் பேடன் பவல் தினவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரியும் பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச்சங்க உப தலைவருமான எஸ்.தியாகராஜா தலைமையில் யாழ். வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் இடம்பெறும்.



இதில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் ஆர்.ஜே. இன்பராஜ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் எஸ்.ஜெயானந்தகுமார், தலைமைக்காரியாலய சாரண ஆணையாளர் பி.அஜித்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்லையா இராமநாதன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு போதனாசிரியர் ராதை அருளம்பலம், கௌரவ விருந்தினராக கிருபா சாரதிப்பயிற்சிப் பாடசாலை அதிபர் அழகுசுந்தரம் கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# யாழ். இந்துக் கல்லூரியின் சாரணர் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்பின் நூற்றாண்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் குழுத்தலைவர் பா.கஜேந்திரன் தலைமையில் கல்லூரியில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் கலந்து கொள்வார். (இ-7)

# கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டடத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-10-106)

# எழுத்தாளர் தேவகாந்தனின் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்ச்சி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, நூலகக் குவிமாடக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கனடாவிலிருந்து வந்திருக்கும் எழுத்தாளர் தேவகாந்தன், 'சமகால தமிழ் நாவல் பரப்பில் புலம்பெயர்ந்தோர் நாவல்களின் வகிபாகம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்.

ஆர்வமுள்ளோர் யாரும் பங்குபற்றலாமென வாசகர் வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)


## ஆசிரியை தேவை

இடம்: நவமங்கை நிவாசம், இராச வீதி, கோப்பாய் மத்தி.

தையல் ஆசிரியைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முடிவுத் திகதி: 25.03.2018

T.P: 021 223 0418

நிர்வாகம் (2871)

## இலவச தையல் பயிற்சி வகுப்புகள்

இடம்: நவமங்கை நிவாசம், இராசவீதி, கோப்பாய் மத்தி.

வகுப்புகள் கிழமை நாட்களில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 25.03.2018

T.P இல. 021 223 0418

நிர்வாகம் (2845)

வலம்புரி. விளம்பரத் தொடர்புகளுக்கு: 021 221 7603, 021 567 1532

## வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

கிளி/கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 30/03/2018 ஆம் திகதி நடைபெறவுள்ளது. முன்னாயத்தம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 23/02/2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றலில் மதிப்பிற்குரிய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்களின் தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளமையால் குறித்த இவ் ஆலோசனைக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், உற்சவகால உபயகாரர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உற்சவகால ஒழுங்கமைப்பாளர்கள், போக்குவரத்து பிரிவினர் அனைவரையும் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கியுதவுமாறு தயவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை,
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.

வீ.இராமநாதன்
தலைவர்.

தி.பிரபாகரன்
செயலாளர்

(சி-1662)

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப்பொங்கல்-2018

## ஒளி/ஒலி சேவைக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

கிளிநொச்சி, கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 30.03.2018 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ் உத்தரப் பொங்கலின் போது ஒளி/ஒலி சேவையினை வழங்கக் கூடிய தகுதியான அனுபவம் மிக்கவர்களிடமிருந்து விருப்பத் தெரிவினை எதிர்பார்க்கின்றோம். ஏறக்குறைய 1000 மின்குமிழ்கள், 20-25 வரையான ஒலிபெருக்கிகள் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அதற்கேற்ற வகையிலான மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தக்கூடிய வகையில் சேவை வழங்குவதுடன் பகுதியாகவும் சேவை வழங்க முடியும் என்பதுடன் முழுமையான விபரங்களுடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அனுபவம் என்பனவற்றை உள்ளடக்கி எதிர்வரும் 26/02/2018 ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர் ஆலய பரிபாலன சபை நாகதம்பிரான் ஆலயம் புளியம்பொக்கணை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வீ.இராமநாதன்
தலைவர்.

தி.பிரபாகரன்
செயலாளர்.

(சி-1663)

## கல்யாணமாலை


### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BA/சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/8288 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 8<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7562 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 72சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:ICMA, ACCA/ கணக்காளர்<br>தொ.இ: B/8289 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7563 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 29 செவ் இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/8290 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 20 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS<br>தொ.இ: G/7567 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Diploma/ வங்கியாளர்<br>தொ.இ: B/8292 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:32சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/7568 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 200 அறவிடப்படும்.

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக வட்டுவாகல் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் செல்வபுரம், வட்டுவாகல் ஆகிய இரண்டு கிராமங்களின் எல்லையில் காணப்படும் சுடலையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக வட்டுவாகல் மக்கள் குறித்த சுடலையை சரியான முறையில் எல்லைப்படுத்தி தமது பாரம்பரிய சுடலையை எல்லையிட ஆவன செய்யுமாறு கோரி நேற்றுக்காலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

குறித்த சுடலைப்பகுதியில் கடந்த 13ஆம் திகதி பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் மற்றும் அரச அதிகாரிகள் மதில் கட்ட முற்பட்ட போது அதனை செல்வபுரம் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் தடுத்து அரச அதிகாரிகளோடு முரண்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடிய மக்கள் குறித்த காணியில் மதில் அமைத்து தமது மயானத்தை உரிய முறையில் அமைக்க எல்லையிட்டு இந்த பிணக்கினை தீர்க்குமாறும் காலா காலமாக நாம் பயன்படுத்தும் மயானத்தை எம்மிடம் மீட்டுத்தருமாறும் கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்நிலையில் இவர்களில் 5 பேர் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடி மீண்டும் மாவட்ட செயலாளரை வாயிலுக்கு அழைத்து மக்கள் கருத்துக்களை கூறி தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர். மக்கள் பிரதிநிதிகள் ஐவரை அழைத்து மாவட்ட செயலாளர் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதை தொடர்ந்து கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் வினவிய போது, குறித்த பிணக்குடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் இரண்டு கிராம மக்களையும் அழைத்து கலந்துரையாடி ஒரு சுமுகமான தீர்வினை காண நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார். (2-281)

# கமநல வங்கிகளுக்கு திறனாய்வு போட்டி; ஒட்டுசுட்டான் கமநல வங்கி முதலிடம்

(மல்லாவி )

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையகத்தினால் மாவட்ட ரீதியாகவுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட கமநல சேவை நிலையங்களின் கீழ் இயங்கி வரும் "கமநல வங்கிகளுக்கு" இடையில் நடைபெற்ற திறனாய்வுப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள "கமநல வங்கி" மாவட்ட ரீதியில் முதல் நிலையினைப் பெற்று பரிசாக கணனித் தொகுதி ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் - சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கமநல வங்கிகளுக்கிடையிலான மாவட்ட ரீதியான திறனாய்வுப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 10 கமநல வங்கிகளில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமநல வங்கி வெற்றி பெற்றுள்ளது. இந்த கமநல வங்கிகள் முற்றுமுழுதாக விவசாயிகளிற்காக மட்டுமே இயங்கி வருகின்றது.

இதற்கமைய, ஒட்டுசுட்டான் கமநல வங்கி ஊடாக மகளிர் விவசாயிகளின் சேமிப்பு கணக்குமற்றும் குளங்களின் பெயரில் உள்ள சேமிப்பு கணக்கு, விவசாயிகளின் பிள்ளைகளின் சிறுவர் சேமிப்பு கணக்கு, ஏனைய விவசாயிகளின் சேமிப்பு கணக்கு என்பனவற்றில் மொத்தமாக 3 ஆயிரத்து 392 கணக்குகளையும் விவசாயிகளால் பங்கு வைப்புக் கணக்கு 2 ஆயிரத்து 859 மாக மொத்தம் 6ஆயிரத்து 251 வங்கி கணக்கு களை கொண்டு பல இலட்சம் ரூபா வைப்பை திரட்டி சிறப்பாக இயங்கி வரும் நிலையில் முதல் நிலையைப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# பெண் நோயியல் மகப்பேற்று வைத்தியசாலை அமைக்க சரியான இடத்தைத் தெரிவு செய்க

(கண்டாவளை)

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள வட மாகாணத்திற்கான பெண் நோயியல் மகப்பேற்று சிறப்பு வைத்தியசாலையை கிளிநொச்சி மாவட்டத்தில் சரியான இடத்தை தெரிவு செய்து அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு மாகாணத்திற்கான சிறப்பு பெண்நோயியல் மகப்பேற்று வைத்தியசாலையை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பெண் நோயியல் வைத்தியசாலையை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் அமைப்பதற்கு போதுமான காணி இல்லையெனவும் மாற்றுக்காணி ஒன்றைத் தெரிவு செய்து அந்தக் காணியிலே வடக்கு மாகாணத்திற்குரிய வைத்தியசாலை அமைய வேண்டுமென பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையானது மாவட்ட பொது வைத்தியசாலைக்குரிய அடிப்படை கட்டுமானங்கள் இன்றி இயங்கி வருகின்றது.

ஒவ்வொரு பிரிவுகளிலும் இரண்டு விடுதிகள் இருக்க வேண்டிய நிலையில் ஒவ்வொரு விடுதிகள் மட்டுமே உள்ளன.

அத்துடன், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கண் சிகிச்சை, என்புமுறிவுகளுக்கான சிகிச்சை, தோல் சிகிச்சை, இருதய நோய் சிகிச்சை, விபத்துப்பிரிவு, என்பன எந்தவிதமான கட்டடங்களும் விடுதிகளும் இன்றி இயங்கி வருகின்றன.

இதனால் இவ்வாறான சிகிச்சை பெற வேண்டியவர்கள் வெளிமாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதேவேளை சிறுநீரக சுத்திகரிப்புக்கான இயந்திரங்கள் உள்ளபோதும் அவற்றுக்கான கட்டடங்கள் அவற்றை இயக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த வைத்தியசாலை வளாகத்தில் வடமாகாணத்திற்கான பெண்நோயியல் சிறப்பு வைத்தியசாலையினை இந்த வைத்தியசாலை வளாகத்தில் அமைப்பதற்கு திரை மறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றம் சாட்டியுள்ளன.

இவ்வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளில் மாற்றுக்காணிகளைத் தெரிவு செய்து இந்த மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்ற பெண்நோயியல் வைத்தியசாலையைஅமைக்க வேண்டுமென்றும் மாவட்ட பொது வைத்தியசாலைக் குரிய ஏனைய கட்டுமானப்பணிகளையும் முன்னெடுக்க மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு தரப்பினரும் கோரி க்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இந்த வைத்தியசாலை அமைப்பதற்குரிய கலந்துரையாடல் ஒன்று கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றதுடன், இறுதி முடிவு எடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய இரண்டாம் கட்ட முன்னாயத்த கூட்டத்தின் இறுதி தீர்மானங்கள்



(பூநகரி)

எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் சம்பந்தமான இரண்டாவது முன்னாயத்தக்கூட்டம்நேற்று முன்தினம் 20 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர்சி.ச. கிருஸ்னேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முப்படைகளின் அதிகாரிகள், பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பர், பூநகரி பிரதேச சபை செயலாளர் வலைப்பாடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், சுகாதார சேவைப் பகுதியினர் வைத்தியர்கள் எனப் பலதரப்பினரும் கலந்து கொண்டதோடு உற்சவ ஏற்பாடுகள் பற்றி ஆராய்ந்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. எதிர்வரும்28 ஆம் திகதி கொடியேற்றுடன் ஆரம்பமாகி மார்ச் 3 ஆம் திகதி திருப்பலிப்பூசையுடன் நிறைவு பெறும் என தெரிவிக்கப்பட்டது.

இவ்வருடம் சென்ற வருடத்தைப்போல் 18 ஆயிரம் யாத்திரிகர்கள் வரக்கூடும் என எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட எப்பொருட்களையும் கொண்டு செல்ல முடியாதெனவும், மதுபான வகைகளுக்கு முற்றாக தடை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாத்திரிகர்களுக்குரிய சுகாதார சேவைகள் வசதி, குடிநீர் வசதி எனவும் பல ஏற்பாடுகள் முன்னதாக அங்கு சென்றுள்ள மூப்பர் தலைமையிலான குழுவினர் செய்து வருகின்றனர்.

28 ஆம் திகதியில் இருந்து பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஏற்பாட்டுக் குழுவினரால் அறிவிக்கப்பட்டது. (2-84)

# 90 ஆயிரம் சுலாப்பி இன மீன்குஞ்சுகள் வெளி வயல் குளத்தில் விடப்பட்டன

## ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு



(மல்லாவி )

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மன்னாகண்டல் கமக்கார அமைப்பின் கீழுள்ள வெளி வயல் குளத்தில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 90 ஆயிரம் சுலாப்பி இன நன்னீர் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் - சற்குணநேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கலாவெவ நன்னீர் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மீன்குஞ்சுகளே விடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் இவ்வாறான நன்னீர் மீன்-குஞ்சுகள் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 5 நீர்ப்பாசன குளங்களில் மொத்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் சுலாப்பி இன நன்னீர் மீன் குஞ்சுகள் விடப்படவுள்ள நிலையில் முதல் கட்டமாக "வயல் வெளிக்" குளத்தின் கீழ் 90 ஆயிரம் மீன் குஞ்சுகள் நேற்றைய தினம் விடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஏனைய 4 குளங்களின் கீழ் ஒருஇலட்சத்து 50, ஆயிரம் சுலாப்பி இன நன்னீர் மீன் குஞ்சுகள் விடப்படவுள்ளன.

இந்நிகழ்வுவின் போது, ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னாகண்டல் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட விவசாயிகள், மன்னாகண்டல் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (2-15)




# இரு இளைஞர்கள் சாதனைப் பயணம்

(குருமன்காடு)

வவுனியாவை சேர்ந்த இரு இளைஞர்கள் பாடசாலை மாணவர்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கும் சிறந்த கற்றல் சூழலினையும் ஏற்படுத்தும் முகமாக மாணவர்களிற்கான இலவச போக்குவரத்து சேவையை நாடு பூராகவும் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பீதுருதாகால மலைச்சிகரத்திற்கு மோட்டார் சைக்கிள் பயணம் ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளனர்.

பிரதாபன் , இமையவன் ஆகிய இரண்டு இளைஞர்கள் மூன்று நாள் பயணமாக எதிர்வரும் மார்ச் மாதம், முதலாம் திகதி வவுனியாவில் இருந்து ஆரம்பிக்கவுள்ளனர். (2-250)

## கட்டுக்கரை குளத்தின் நீர் இறைப்பிற்கு போதாது

# நெற்பயிர்கள் கதிர்விட்டுள்ளமையால் வாடும் அபாய நிலையை எட்டியுள்ளன

### சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோருகின்றனர்



(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் 2017-2018 காலபோக நெற்செய்கை 30 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணப் பட்டுள்ளது. தற்போது அதிகளவான நெற் பயிர்கள் கதிர் விட்டுள்ளன.

இந் நிலையில் முருங்கன் கட்டுக்கரைக் குளத்தில் நீர் வற்றி இறைப்பிற்கு போதாமையாகவுள்ளதால் நீரின்றி பயிர்கள்வாடும்அபாயநிலையை எட்டியுள்ள தாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இப் பகுதி விவசாயிகள் கட்டுக்கரைக்குளத்தை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ச்சியாக மழை பெய்யாத நிலையிலும்,தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியின் காரணமாகவும் கட்டுக்கரை குளத்தில் நீர் வற்றிய நிலையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்னெடுக்க நீர் இன்மையினால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள குளங்களில் நீர் வற்றிய நிலை காணப்படுகின்றது.

விவசாயத்திற்காக விவசாய காணிகளில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறுகளில் கூட நீர் வரத்து குறைந்து காணப்படுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

அதிகளவான நெற்பயிர்கள் கதிர் விட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் நீர் இல்லாமை பயிர்களை அழிவடையச் செய்யும் நிலை ஏற்படுத்தியுள்ளது.

தமது பாதிப்பு குறித்து விவசாய திணைக்கள அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் யாரும் வந்து தமது பிரச்சினைகள் குறித்து உரிய முடிவுகளை மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் நகையினை ஈடு வைத்தும்,தமது கால்நடைகளை விற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது கால்நடைகளுக்கும் குடிநீர் இல்லை.இந்நிலை தொடருமாக இருந்தால் மன்னார் மாவட்ட விவசாயிகள் பட்டினிச்சாவை எதிர் கொள்ளும் நிலை ஏற்படும்.

எனவே உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாய செய்கைக்கு தேவையான நீரை பெற்றுக்கொடுக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4-281)

## ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய

# சேவையில் ஈடுபட்ட பேருந்தின் மீது தனியார் சேவையினர் தாக்க முயற்சி

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு

(கண்டாவளை)

முல்லைத்தீவு அம்பாள் புரம் பகுதியிலிருந்து ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற இ.போ.ச. பேருந்தின் மீது, தனியார் போக்குவரத்து சேவையினர் தாக்க முற்பட்டமை தொடர்பில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

24 கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகப் பாடசாலை சென்று திரும்பிய மாணவர்களுக்கு ஜனாதிபதி போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கடந்த வாரம் பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் காலை 6.10 மணிக்கு பயணிக்கின்ற பேருந்து நேரம் மாற்றம் செய்யப்பட்டு 6.40 மணிக்கு மல்லாவி ஊடாக அம்பாள் புரம் பகுதிக்குச்சென்று பாடசாலை மாணவர்களை ஏற்றி வன்னி விளாங்குளம் பாடசாலை மற்றும் மாங்குளம் பாடசாலைகளுக்கு இறக்கி விட்டு மாங்குளம் ஊடாக முல்லைத்தீவு நோக்கி புறப்பட்ட குறித்த இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பேருந்தின் மீது முல்லைத்தீவு தனியார் சேவையினர் தாக்க முற்பட்டதாகத் தெரி வித்து மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு சம்பந்தப்பட்டவர்களினால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.(2-315)




## தாய் மொழித்தினம்

மாங்குளம் மகா வித்தியாலய தாய் மொழித் தினம் முத்தமிழ் மன்றத் தலைவர் செல்வி. இ. சாதுஜா தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக துணுக்காய் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கவிதா சந்திரகுமார் கலந்துகொள்வார். (2)

# வீட்டினுள் நுழைய முற்பட்ட முதலை மடக்கிப் பிடிப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் வீட்டிற்குள் நுழைய முற்பட்ட முதலையை மடக்கி பிடித்தனர் இளைஞர்கள்.

வவுனியா திருநாவற்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிற்குள் நுழைய முற்பட்ட முதலை ஒன்று இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப் பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.


இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் திருநாவற்குளத்தில் உள்ள வீடு ஒன்றினுள் நுழைய முற்பட்ட 5.5 அடி நீளமான முதலையை இளைஞர்கள் மடக்கிப்பிடித்து வன ஜீவராசி திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப் பட்டுள்ளது. அண்மைக்காலமாக வவுனியாவில் நிலவி வரும் வரட்சி காரணமாக குளங்களில் உள்ள நீர் வற்றிக் காணப்படுவதனாலே இந்நிலையேற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## மலசலக்கூடக்குழிகளின் மூடிகளில் வெடிப்புக்கள்

# கழிவுநீர் வெளியேறி பாலத்தின் அடியில் தேக்கம்





(மல்லாவி)

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பரந்தன் நகரப் பகுதியில் உள்ள பொது மலசல கூடத்தின் குழிகளின் மூடிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டு துர்நாற்றம் வீசுவதுடன், இதில் இருந்து வெளியேறும் நோய்காவி இலையான்கள் அருகில் உள்ள 3 உணவகங்களைப் பாதிக்கும் சூழ்நிலை காணப்படுவதுடன், மலசல கூடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீரானது புகையிரத பாதையின் கீழுள்ள பாலத்தின் அடியில் தேங்கி நிற்பதால் டெங்கு நோயை உருவாக்கும் நுளம்புக் குடம்பிகள் உருவாகும் அபாய நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பரந்தன் நகரப் பகுதியில் தினசரி ஆயிரத்துக்கு மேற்பட்ட பேருந்து பயணிகள் மற்றும் ரயில் பயணிகள் உட்பட பரந்தன் பொதுச் சந்தைக்கும் பொது மக்கள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக பரந்தன் நகரப் பகுதியை அண்மித்த பகுதிகளில் இங்குள்ள பொது மலசலகூடத்தின் மூன்று மலக்குழிகளின் மூடிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதுடன் மலக்குழிகளும் நிறைந்து துர்நாற்றம் வீசுகின்றது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பொது மலசல கூடத்திற்கு அண்மையாக உள்ள மூன்று உணவகங்களின் சமையல் கூடங்களின் சுகாதார நடவடிக்கைகளுக்கும் பாதிப்பும் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மலசலகூடமானது ஆண்/பெண் இருபாலாருக்கும் பொதுவானதாக உள்ள நிலையில் ஆண்/பெண் இருபாலாருக்கும் உரிய பகுதிகள் அடையாளப்படுத்தப்படாது காணப்படுவதால் இருபாலாரும் பல்வேறு இடர்பாடுகளை எதிர் நோக்கி வருவதாக பாவனையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறான நிலையில், பொதுச்சந்தையின் மீன் விற்பனை கூடத்தில் தேவையற்ற கழிவுப் பொருட்கள் நிறைந்து காணப்படுவதுடன் மீன் விற்பனைக் கூடத்தின் பின்புறமாக உள்ள கழிவுவாய்க்காலில் கழிவுநீர் மற்றும் மண் தேங்கி நிற்பதுடன் அந்த சுற்றாடல் பகுதியிலும் கழிவுப் பொருட்கள் தேங்கிக் காணப்படுகின்றது.

எனவே கரைச்சி பிரதேச சபையின் அதிகாரிகள் நேரில் வருகை தந்து பார்வையிட்டு இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், பயணிகள் உட்பட பரந்தன் நகரப் பகுதி வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

## பதினைந்து மாதகாலப் பகுதியில்

# 2 ஆயிரத்து 864 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன

(பரந்தன்)

கிளிநொச்சியில் இரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு அபாயகரமான வெடிபொருட்கள் பதினைந்து மாத காலப்பகுதிக்குள் அகற்றப்பட்டுள்ளதாக ஷார்ப் நிறுவன முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் இயங்கி வரும் ஷார்ப மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தால் பதினைந்து மாத காலப்பகுதியில் இரண்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளது என நிறுவன முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்

அண்மையில் ஷார்ப் நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்கும் ஜப்பான் நாட்டின் இலங்கைப் பிரதிநிதி செல்வி நிரோசா வெல்கம உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு மேற்படி நிறுவனத்தின் பளை அலுவலகம் மற்றும் கண்ணிவெடி அகற்றும் பகுதிகளை பார்வையிட்டார். இதன் போது நிறுவனத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் முடிவடைந்த வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடும் போது, இந்த நிறுவனமானது கடந்த பதினைந்து மாத காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட அம்பகாமம் மற்றும் தச் சடம்பன் பகுதிகளிலும்,கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகமாலையிலும் மூன்று இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று அறுபது சதுரமீற்றர் பரப்பாவில் இருந்து இரண் டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. தொடர்ந்தும் முகமாலை கிளாலி ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஜப்பான் நாட்டு மக்களிடமிருந்து பெறப்பட்ட 9.8 பில்லியன் பணம் நிதியுதவியூடாக குறித்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (2-312)

# கலைத்தரிசனம்





# உடுக்குக் கலைஞர் கணேசன் ஆனந்தி அவர்களுடனான சந்திப்பு

தெந்தெனத நாதென நாதெனத நானம்
தேனா தெனதெந்த நாதெனத நானம்
தகு தகுத தகு தகுத தகு தகுத தொம்தொம்

தாளக்கட்டுடன் உடுக்கின் ஒலியுடன் தாளமும் சேர்ந்து ஒலிக்க நான்கு சிறுபிள்ளைகளுக்கு உடுக்கு வாசித்து பழக்கிக் கொண்டிருந்தார் 1944. 09.24ஆம் திகதி தொண்டைமானாற்றில் பிறந்த கணேசன் ஆனந்தி என்ற அந்த அம்மா. அகவை 73ஐ தாண்டியும் உடுக்கின் வாசிக்கும் பக்கமான சூரிய வளையத்தில் அவரின் விரல்கள் இளமையுடன் வினோதமாக விளையாடிக்கொண்டு இருந்தன.

• தாளத்திற்கிசைவாக உடுக்கின் கெச்சையை தளர்த்தியும் இறுக்கியும் அசைக்கும் அற்புதமும் உடுக்கிலிருந்து பிரசவிக்கும் அற்புத ஓசையும் என்னை அறியாமலே அந்தத் திண்ணைக்குந்தில் அமர வைத்தது.

உடுக்கின் இயக்கத்திற்கு சற்று விடுதலை கொடுத்து விட்டு என்னை அன்புடன் வரவேற்றார்கள். கேள்விகளை தொடுத்தேன். மனந்திறந்து தன் கலைப்பணி பற்றி வலம்புரிக்கு கூறினார்.

❖ அம்மா! அற்புதமாக வாசிக்கிறீர்கள். இந்தத் தெய்வீகக் கலையை எங்கே? யாரிடம் கற்றீர்கள்?

உண்மைதான். இது ஒரு தெய்வீகக் கலைதான். நம் நடராஜபெருமானின் திருக்கரத்தில் இருக்கும் இந்த உடுக்கின் நாதமே படைப்பின் ஜீவாதாரம். எனது மாமனார் வல்லியப்பன் அவர்கள் கூத்து அண்ணாவியார் அவருடன் எனது அண்ணன்மார்களும் மத்தளம், மிருதங்கம், புல்லாங்குழல், உடுக்கு போன்ற வாத்தியங்களையும் வாசித்து தேர்ச்சி பெற்றவர்கள்.

எங்கள் பரம்பரை கோவிலிலும் மற்றும் அயல் கோவில்களிலும் அவர்கள் உடுக்கடித்து பாடும் போது அப்போது சிறுமியாக இருந்த நானும் தாளம் போட்டும், பிற்பாட்டு பாடியும் இணைந்து கொள்வேன்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வீட்டிலுள்ள உடுக்கை எடுத்து நானே பாட்டுப்பாடி உடுக்கை வாசித்தும் பரீட்சயப்படுத்திக் கொள்வேன். இது எனது ஆர்வத்துடன் கலந்த ஆசையாகும்.

காலப்போக்கில் அண்ணன் பாட தாளம் பிசகாமல் உடுக்கை வாசிக்க பழகிக் கொண்டேன். அப்போதெல்லாம் கேள்வி ஞானத்தில் தான் உடுக்கை வாசித்தேன். தாளம் தப்பாது நான் உடுக்கை நேர்த்தியாக வாசிப்பதை பார்த்த எனது பேரனார் சரியான முறையில் அதன் தாளக்கட்டை எனக்கு கற்றுத்தந்தார்.

இன்றைக்கு பலர் முன்னால் நான் உடுக்கை வாசிப்பதற்கும் இந்தப் பிள்ளைகளுக்கு கற்றுத் தருவதற்கும் என்னை நான் வளப்படுத்திக் கொள்வதற்கும் கடவுள் அருளும் என் அண்ணன்மாரும் எனது ஆர்வமுமே காரணம் எனலாம்.

❖ உடுக்கின் கொட்டு எந்தெந்த மரத்தில் உருவாக்கு கின்றார்கள் அதன் அமைப்பு என்ன?

உடுக்கு கொட்டின் வடிவமைப்பைப் பொறுத்தே அதன் நாதமும் அதாவது அதன் ஓசை பிறக்கும். அது உருவாக்கும் மரத்தை பொறுத்து கடைந்தெடுக்கும் தன் மையிலும் தான் உடுக்கு உயர்வடைகிறது. இதன் நாதம் கேட்கும் இடத்தில் எந்தத் துஷ்ட தேவதைகளும் அணுகாது என்றும் எனது மாமன் சொல்லிக் கேட்டதுண்டு.

உடுக்கைபால் மரங்களில் தான் பெரும்பாலும் கடைவார்கள். வேப்பங் கொட்டு இது பூசை முகத்துக்குரியது. பலா, கிழுவை கொண்டல் முதிரை என்பவற்றிலும் கடைவார்கள். காஞ்சூரை மரத்திலும் கடைவார்கள். அதை கோவில்களிலோ மங்கள நிகழ்வுகளிலோ வாசிப்பதில்லை. மற்றும் வெள்ளெருக்கிலும் கடையலாம்.

இதன் இடம் வலமாக உள்ள சூரிய வளையம் சந்திர வளையம் என்பவற்றை மாம்பலகையில் தான் செய்வார்கள். அதில் 6 துவாரங்கள் மட்டில் போடப்பட்டிருக்கும். அந்தத் துவாரங்களில் கோத்துக்கட்டும் நூலின் மூலம் தான் வளையங்கள் உடுக்குடன் இணைக்கப்படும்.

தற்போது வெண்கலம், அலுமினியம் போன்ற உலோகங்களிலும் கொட்டுக்கள் வார்க்கப்படுவதுண்டு. அது பற்றி எனக்குத் தெரியாது. சந்திர வளையத்தில் கண்ணாடி சௌவை ஒட்டி குறுக்காக மெல்லிய தங்கூசி இறுக்கமாக கட்டப்பட்டிருக்கும். இப்படிக் கட்டினால் நல்ல நாதம் பிறக்கும்.

மற்றையது சூரிய வளையம். இதுவே உடுக்கின் வாசிக்கும் பக்கம். இது சற்று உரமான குடற்சவ்வால் எட்டப்படும். இந்தச் சவ்வுகள் சுயமாக வயதாகி இறந்த மாட்டின் தோளின் அடிப்பாகத்திலிருந்து அதன் மடியிலிருந்தும் வார்ந்து குற்றம் நீக்கி எடுக்க வேண்டும். கொக்குமிடறு, உடும்புச் சவ்வும் எடுக்கலாம் எனக் கேள்விப்பட்டுள்ளேன்.

சந்திர வளையம், சூரிய வளையம் என்பவற்றை உடுக்குடன் இணைய கோர்த்துக் கட்டப்பட்ட கயிற்றை சுற்றி துணியில் தைக்கப்பட்ட பட்டி கட்டியிருப்பார்கள். இதை "கெச்சை" சிலர் செச்சை என்றும் சொல்வார்கள். இந்த கெச்சையை இடது கரத்தால் பற்றி பிடித்து தாளத்திற்கேற்றபடி அசைத்து உடுக்கை வாசித்தால் தான் நாதம் பிறக்கும். இந்த நாதத்தில் இறைவனும் மயங்கிடுவார். இசையில் வசமாக இதயம் உண்ணா. மனிதரின் தாலாட்டு தொடங்கி ஒப்பாரிப்பாட்டு இசை தானையா.

❖ மேற்றைய தோல் வாத்தியங்களுக்கு உள்ளது போல் உடுக்கு வாத்தியத்திற்கும் பாடங்கள் உண்டா?

கட்டுப்பாடில்லாத எவையும் காலத்தை மிஞ்சி வாழ்வதில்லை. எங்கள் கலை, கலாசாரம், பண்பாடு என்பவும் அப்படியே தான். அதேபோல் உடுக்கிற்கும் தாளக்கட்டுக்கள் உண்டு. அதை உடுக்குத் தரு என்று கூறுவோம். நான் அந்தத் தருக்களை அடிப்படையாக வைத்தே என்னிடம் கற்றுக் கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியர்க்கு உடுக்கை கற்றுத் தந்து கொண்டிருக்கின்றேன்.

இன்று உடுக்கின் பயன்பாடுகள் வெகுவாக குறைந்து கொண்டே போகின்றது. இருந்தாலும் எங்களைப்போல் கிராமத்து மக்கள் உடுக்கை பயன்படுத்துகின்றார்கள். வாசிக்கின்றார்கள். பெரும்பாலும் தருக்கள் தெரியாவிட்டாலும் தாளம் பிசகாது சரியாகவே வாசிக்கின்றார்கள். இருந்தாலும் தருக்கள் தெரிந்து கற்றுக்கொண்டு முறைப்படி வாசிப்பார்களானால் இந்த தெய்வீகக் கலையை வருங்கால சந்ததியினருக்கு முறைப்படி கையளிக்கலாம்.

❖ ஒரு சில பாடல்களை ஆதாரமாக கொண்டு உடுக்கின் தாளக்கட்டுக்களை அதாவது தருக்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

முடியும். இன்று கிராமியக் கலைகளான கோலாட்டம், கும்மி, குடமூதல் போன்றவற்றுடன் பக்தி நிகழ்வான கரகம், காவடி போன்ற நிகழ்வுகளிலும் உடுக்கு வாசிக்கப் படுகின்றன.

அருகி வரும் உடுக்குக் கலை பெரும்பாலும் சிந்துநடை கூத்துக்களிலும் முக்கியத்துவம் பெற்றிருந்ததை காத்தவராஜன் சிந்து நடை கூத்தில் ஆதி காத்தான் வருகைப்பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இங்கு வித்துவான் சங்கீதமுமல்ல-இங்கே
வேறோர் வினோதமான நாகமுமல்ல
பாலர் சிற்றுடுக்கைத் தானடித்தே
சிறப்பாக நாட கூத்தே நடத்திவைப்போம்...

என்ற பாடல் மூலம் உடுக்கின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் அறிய முடிகின்றது. ஆனால் காலப் போக்கில் தபேலா, டோலக்கி போன்ற தோல் வாத்தியங்கள் உடுக்கை முற்றுமுழுதாக உள்வாங்கிக் கொண்டதைக் காணக்கூடியதாக உள்ளது.

காப்புப் பாடல் தரு
"தந் துமி தகம்
தகதிமி தகசம்"

பாடல்: ஓரானைக் கண்ணே கண்ணே-எங்கள்
உமையாள் பெற்ற பாலகனே
ஈரானைக்கண்ணே கண்ணே-எங்கள்
ஈஸ்வரியாள் புத்திரனே.
மூவானைக் கண்ணே கண்ணே-எங்கள்
முக் கண்ணனார் தன் மகனே.
தரு: தாத் தா தீம்தக்க
தாங்கிறத் தில்லானம்.
பாடல்: மாரி வரவு
அக்காளும் மாசி தங்காளும் மாம்-அங்கே
ஆயிழைமார் அக்காளுக்கு ஏழு பேராம்
ஏழு பேற்கோ மாரி நேர் இளையாள்-அவ
இடும்பை என்னும் மாறி ஆதி சக்தி.
தரு:சக்கரம், தவரம்.
பாடல்: சந்தனப் பலகையிலே முத்து மாரி அம்மன்
அவ மாரி தேவி அம்மன்
சாய்ந்திருந்து வேசம்கொண்டா
மாரி தேவி அம்மன்
குங்குமப் பலகையிலே முத்துமாரி அம்மன்
அவ மாரி தேவி அம்மன்
குளிர் முகமாய் வேசம் கொண்டா
மாரி தேவி அம்மன்.
தரு: தகுதகுத, தகுதகுத
தகுதகுத தொம் தொம்.
பாடல்: சம்போ சங்கர இரட்சகதீசா
தாள் பணிந்தேனே கைலாசவாசா.
அம்பிகை பாகா ஆனந்தத்தேவா
அருள் புரிந்தென்னை ஆளுவாய் நேசா.

இவை போன்ற தருக்களைக் கொண்டே உடுக்கை வாசிப்போம். பெரும்பாலும் எல்லாப் பாடல்களும் இந்தத் தருக்களுக்குள் அமைந்துவிடும்.

❖ உடுக்கை வாசிக்க உங்களுக்குத் தேவையான அரங்குகள் கிடைத்ததா?

பெரிதாக ஒன்றும் கூறிவிட முடியாது. இந்தக் கலையை இப்போது யார் இரசிக்கின்றார்கள். மதிக்கின்றார்கள். இருந்த போதிலும் எனக்குக் கிடைத்த களங்களை நான் பிரயோசனப்படுத்தியுள்ளேன். எங்கள் ஊர்க் கோவில்களில் நடைபெறும் வேள்விகள், மடைகள் போன்ற வைபவங்களிலும் விழாக்களிலும் வாசித்துள்ளேன். அண்மையில் பருத்தித்துறை இராசா இராணி இல்லத்தில் நடந்த ஒரு சிறப்பு வைபவத்தில் எனக்கு அழைப்புக் கிடைத்தது. அந்த நிகழ்வில் எனது அண்ணா கலாபூஷணம் ஆழ்வாப்பிள்ளை அவர்கள் பாட்டுப்பாட நான் உடுக்கு வாசித்தேன். அது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

❖ உங்கள் கலையை வளர்ப்பதற்கும் அறிமுகமாக்குவதற்கும் ஏற்றகளம் கிடைக்கவில்லையே என வருந்தியதுண்டா?

உண்டு. வெளியே நடக்கும் அரச கலாசார விழாக்களிலும் வைபவங்களிலும் களம் கிடைத்தால் என்னிடம் பயின்று கொண்டிருக்கும் பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதுடன் அவர்களையும் ஊக்கப்படுத்தியிருக்கலாமல்லவா.

❖ உடுக்குக் கலைமூலம் உங்களுக்கு உங்கள் சமூகத்தில் எத்தகைய அந்தஸ்து கிடைத்தது?

எங்கள் கோவில்களில் நான் பக்தியுடன் பாடி உடுக்கு வாசிக்கும் போது பக்தர்கள் மனமுருகிக் கேட்பதுடன் தங்கள் குழந்தைகளையும் தாளம் போடவும், பிற்பாட்டுப் படிக்கவும் தூண்டுவார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு உடுக்குக் கலையை கற்பிப்பதற்கு என்னை அனுமதித்தது. அவர்கள் உடுக்கு அண்ணாவி என எனக்குக் கொடுத்த அங்கீகாரமும் மதிப்புமில்லையா?

❖ இறுதியாக இன்றைய வளர் இளம் கலைஞர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

உடுக்கு வாத்தியம் தேவைப்பட்ட, தேவைப்படும் நிகழ்வுகளுக்கு அதற்குரிய அந்தஸ்தையும் இடத்தையும் வழங்கிக் கௌரவிக்க வேண்டும். மற்றைய வாத்தியங்கள் போல் உடுக்கையும் சரியான முறையில் பயில்வதற்கு இளைஞர்கள் மட்டுமல்ல யுவதிகளும் முன்வர வேண்டும்.

மெல்லச்சாகும் இந்தக் கலைக்கு உயிர் தந்து உய்விக்க வேண்டும். இதைவிட நான் வேறென்ன சொல்லப் போகிறேன். உடுக்கிற்கும் அதன் இனிய தெய்வீக நாதத்திற்கும் மங்களம் பாடாமல் காப்பாற்றுங்கள் வாருங்கள், நானும் உங்களுடன் சேர்ந்து கொள்கின்றேன்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# சுவிஸ்லாந்துத் தூதுவர் இராணுவ தளபதி சந்திப்பு



(கொழும்பு)


இலங்கை, மாலைதீவு, சுவிஸ்லாந்து தூதுவரான ஹெயின்ஷ் வோகர் நெதர்கோர் (Heinz Walker-Nederkoorn) இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை சந்தித்தார்.

இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இராணுவத்தலைமையகத்திற்கு வருகை தந்த தூதுவரை இராணுவ பிரதி கேணல் கே.ஏ.ஏ. உதயகுமார வரவேற்றார்.

இந்த நட்பு ரீதியான சந்திப்பின் போது, யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கில் சமரசம் மற்றும் இன ரீதியிலான ஈடுபாட்டை முன்னெடுப்பதற்காக இராணுவத்தின் பொறுப்புகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பின் போது சுவிஸ்லாந்து தூதரகத்தின் சிரேஷ்ட பிரதிநிதியும் கலந்து கொண்டார். (இ-7)




# ஐ.தே.கவுடன் இணைந்து ஆட்சியைத் தொடர இரவுகளில் இரகசிய சந்திப்பில் ஜனாதிபதி

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை ஐ.தே.கவே நாசப்படுத்தியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார். எனினும் அப்படிப்பட்ட ஐ.தே.கவுடன் சேர்ந்து ஆட்சியமைக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார்.

அதனாலேயே அவர் இரவுகளில் இரகசியமாக அவர்களை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றார். பிரதமரைக்கூட தீர்மானித்துக் கொள்ளமுடியாத சூழலில் தான் பொது மக்களை அசௌகரியத்துக்கு உட்படுத்தாது உடன் பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என நாம் கோருகின்றோம் என அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அவர் உள்ளிட்ட அறுவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள கறுப்புப் பணம் சுத்திகரிப்பு சட்டத்தின் கீழான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மே 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்ட பின்னர், நீதிமன்றில் இருந்து வெளியேறும் போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் தொடர்பில் பிரதமர் மட்டுமன்றி ஜனாதிபதியும் பொறுப்புக்கூற வேண்டும். ஜனாதிபதி அவரை சிங்கப்பூர் பிரஜை. அது தனக்கு தெரியாது, மறுநாள் பத்திரிகையூடாகவே தெரிந்துகொண்டேன் என கூறி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் தப்பிக்க முடியாது. அமைச்சர் ராஜித என்ன சொல்கிறார். ராஜபக்ஷக்களை சிறையில் அடைத்தால் எல்லாம் சரியாகி விடும் என்கிறார்.

இன்று அர்ஜூன் மகேந்திரன் சுதந்திரமாக உள்ளார். இதே பொது எதிரணியில் யாராக இருப்பினும், சிவப்பு அறிவித்தல் பெற்று இந்நேரம் கைது செய்யப்பட்டிருப்போம். சி.ஐ.டி., எப்.சி.ஐ.டி. எல்லாம் பொது எதிர்க்கட்சியின் உறுப்பினர்களை மட்டுமே குறி வைக்கும்.

இந்த பழிவாங்கும் எண்ணம் வேண்டாம். அதனை ஒரு பக்கம் வைத்து விட்டு. மக்களுக்கு உரத்தை கொடுங்கள். மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாயுங்கள். நாட்டின் பொருளாதாரத்தை ஐ.தே.கவே நாசப்படுத்தியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார். எனினும் அப்படிப்பட்ட ஐ.தே.கவுடன் சேர்ந்து ஆட்சியமைக்கவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார்.

அதனாலேயே அவர் இரவுகளில் இரகசியமாக அவர்களை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றார். இந்நிலையில் ஸ்திரமற்ற அரசாங்கம், பிரதமரைக் கூட தீர்மானித்துக் கொள்ள முடியாத சூழலில் பொதுமக்களை அசௌகரியத்துக்கு உட்படுத்தாது உடன் பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என நாம் கோருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கயிற்றில் தொங்கிய எலும்புக்கூடு

## விசாரணைகள் தீவிரம்



(கொழும்பு)

அக்கரப்பத்தனை- போபத்தலாவ காட்டுப்பகுதியில் வயோதிப ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் எலும்புக்கூடாக கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டெடுக்கப்பட்ட குறித்த எலும்புக்கூடு போபத்தலாவ பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.ரம்பன்டா (வயது 80) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள் ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான ரம்பன்டா கடந்த வருடம் ஜூலை மாதம் வீட்டை விட்டு சென்று வீடு திரும்பவில்லை என உறவினர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவரைக் காணாமை தொடர்பாக எதுவித தகவல்களும் கிடைக்காத நிலையில், நேற்று முன்தினம் விறகு சேகரிக்க காட்டுப்பகுதிக்கு சென்ற ஒருவர் கயிற்றில் தொங்கிய நிலையில் எலும்புக்கூடு ஒன்று இருப்பதனைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

குறித்த எலும்புக்கூட்டினை கண்டெடுத்த பொலிஸார் அது கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பாக தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# 500 மில்லியனுக்கு சொகுசு வீடு ஐ.தே.க.அமைச்சர் கொள்வனவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் 500 மில்லியன் பெறுமதியான சொகுசு வீடொன்றை கொள்வனவு செய்யவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த நபர் சமகால அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப் பதவியை வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல ப்ளு சிப் நிறுவனத்தினால் சொகுசு வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குறித்த அமைச்சரினால் தற்போது வரையிலும் அந்த வீடு கொள்வனவு செய்வதற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் குறித்த நிறுவனத்தினால் அது வரவேற்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சர் கடந்த 3 வருடங்களில் பாரிய முன்னேற்றம் கண்ட ஒருவராவார் என குறித்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் இருந்து தனது போக்குவரத்திற்காக ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்றையே பயன்படுத்தியுள்ளார். அத்துடன் இந்த அமைச்சர் கடந்த தேர்தலில் தனது தொகுதியில் பாரிய தோல்வியடைந்த ஒருவராவார்.

நாட்டில் காணப்படுகின்ற தற்போதைய சூழ்நிலைக்கமைய இந்த விடயம் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தும் எனவும் எதிர்வரும் நாட்களில் இது தொடர்பான முழுமையான தகவல் வெளியாகும் எனவும் குறித்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

# மக்களின் வரிப்பணத்தில் அதிகாரிகள் சுற்றுப்பயணம்

## உதயங்க கடும் சாடல்

(கொழும்பு)

மக்களின் வரிப் பணத்தில் அதிகாரிகள் சுற்றுப் பயணங்களை மேற்கொள்வதாக ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க கடுமையாகச் சாடியுள்ளார்.

தனது கைது நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“நாள் ஒன்றுக்கு 93 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பெற்றுக்கொண்டு தன்னை தேடுவதற்காக உக்ரைனுக்கு விஜயம் மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் என்னிடம் ஏன் வாக்குமூலம் பெறவில்லை என இலங்கை மக்களுக்கு அறிவிக்க வேண்டும்” என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மிக் விமான கொடுக்கல் வாங்கலின்போது 7.833 மில்லியன் டொலர்களை முறையற்ற விதத்தில் கையாண்ட குற்றச்சாட்டு தொடர்பில் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றம் உதயங்க வீரதுங்கவை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பித்தது. எனினும், அவர் நாட்டில் இல்லாத நிலையில், கைது நடவடிக்கை தோல்வியிலேயே நிறைவடைந்தது.

இதேவேளை கடந்த 4 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவிற்குச் செல்ல முற்பட்ட வேளையில், அவர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். எனினும் குறித்த விசாரணைகள் முடியும் வரை வீரதுங்க ஐக்கிய அரபு இராச்சியத்தை விட்டு வெளியேறுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடர் 2018க்கான தெளிவூட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


இப்போட்டித் தொடருக்காக யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வு 2018 மாசி மாதம் 26 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை மூன்றுபிரிவு களாக யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி முதல் மு.ப 11.00 வரை- பாடசாலைத் துறை, மு.ப 11.30 முதல் பி.ப 1.30 வரை- அரச துறை, பி.ப 2.00 முதல் பி.ப 4.30 வரை- உற்பத்தி மற்றும் சேவைகள் துறை

இச் செயலமர்வில் உற்பத்தித் திறன் விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள், நிறுவனங்கள் சார்பான பிரதிநிதி ஒருவரை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இப்போட்டித் தொடருக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 28.03.2018 என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# பாரதம்

## இஸ்ரோவின் அடுத்த சாதனை திரைப்பட பட்ஜெட்டை விட சந்திராயன் 2 செலவு குறைவு



(பெங்களூர்)

விண்வெளி அறிவியலை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட ஹொலிவுட் படமான இன்ஸ்டெல்லரை விட இஸ்ரோவின் சந்திராயன் - 2 விண்கலத்தின் திட்ட செலவுகள் குறைவு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமானது நிலவினை ஆய்வு செய்வதற்காக கடந்த 2008ஆம் ஆண்டு சந்திராயன் - 1 விண்கலத்தை செலுத்தியது. தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மயில்சாமி அண்ணா துரையின் தலைமையில் உருவான இந்த விண்கலம் நிலவில் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்து தகவல்களை அனுப்பியது.

இதன் தொடர்ச்சியாக சந்திராயன் - 2 விண்கலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதற்கான பணிகள் நெல்லை மகேந்திரகிரி, பெங்களூர் மற்றும் சித்ரதுர்கா ஆகிய இடங்களில் தீவிரமாக நடந்து வருகின்றது. இந்த திட்ட செலவுகள் 800 கோடி ரூபாயை தொடுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி அறிவியலை மையமாக கொண்டு சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான 'இன்ஸ்டெல்லர்' என்ற ஹொலிவுட் படத்தின் பட்ஜெட் 1062 கோடி ரூபாய் ஆகும்.

ஒரு திரைப்படத்தின் பட்ஜெட்டை விட குறைவான செலவில் விண்வெளியில் இஸ்ரோ தனது முத்திரையை பதித்து வருகிறது.

கட்டமைப்பை எளிமையாக்கியது, பொருட்களை பயன்படுத்துவதில் கட்டுப்பாடு நிறைவான முடிவைபெறுவது ஆகிய நடவடிக்கைகள் தான் திட்ட செலவுகளை குறைத்துள்ளதாக இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்ய இஸ்ரோ செலுத்திய மங்கள்யான் விண்கலம், கிராவிட்டி என்ற ஹொலிவுட் படத்தின் பட்ஜெட்டை விட குறைவான செலவுகள் கொண்டதாகும். அப்போதே, இஸ்ரோவின் புகழ் உலகம் முழுவதும் பரவியது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சீனர்களை விட இந்தியர்கள் நேர்மையானவர்கள்

### ட்ரம்ப் மகன் புகழாரம்

(டில்லி)

சீனாவை விட இந்தியா எவ்வளவோ மேலாக உள்ளதாகவும், மக்களின் மனோபாவம் ஒரே மாதிரி உள்ளதாகவும் நேர்மையும் அதிகமாக உள்ளதாகவும் ட்ரம்பின் மகன் டொனால்ட் ட்ரம்ப் ஜூனியர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொடி கட்டிப்பறக்கும் ஜனாதிபதி ட்ரம்ப் குடும்பத்தாரின் 'ட்ரம்ப் டவர்ஸ்' நிறுவனம், இந்தியாவிலும் மாடி சொகுசு வீடுகளை கட்டி விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. தற்போது அரியானா மாநிலம் குருகிராமில் 47 மாடிகள் கொண்ட இரட்டை கோபுர குடியிருப்பு ஒன்றை (254 வீடுகள்) இந்த நிறுவனம் கட்டி விற்கிறது. ஆடம்பரமாக கட்டப்படுகிற இந்த வீடுகள் தலா ரூ.5 கோடியில் இருந்து ரூ.11 கோடி வரையிலான விலையில் விற்கப்படும். இதன் விற்பனையை ஊக்குவிப்பதற்காக ட்ரம்பின் மகன் டொனால்ட் ட்ரம்ப் ஜூனியர் ஒருவார பயணமாக இந்தியா சென்றுள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் ஜூனியரிடம் "சீனாவை விட்டு விட்டு இந்தியாவில் அதிநவீன சொகுசு அடுக்கு மாடி வீடுகளை கட்டுவதன் காரணம் என்ன?" என கேள்வி எழுப்பினர்.



டொனால்ட் ட்ரம்ப் ஜூனியர், "ஒரு தொழில் அதிபராக நான் பார்க்கிறபோது, சீனாவை விட இந்தியா எவ்வளவோ மேலாக உள்ளது. மக்களின் மனோபாவம் ஒரே மாதிரியுள்ளது. நேர்மையும் கொஞ்சம் அதிகமாகவே இருப்பதாக கருதுகிறேன்.

"நான் இங்கு புதிதாக வந்தவன் அல்ல. கடந்த 10 ஆண்டுகளாக இங்கே மாற்றத்தை கண்டு வருகிறேன். இங்கே சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன. இது மிகவும் சாதகமான தேசம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## கலாம் வாசஸ்த... கமலஹாச...



(ராமநாதபுரம்)

அப்துல்கலாம் வீட்டில் இருந்து தனது அரசியல் பயணத்தை நேற்று ஆரம்பித்து வைத்து கமலஹாசன், அங்கு பிரமிப்பூட்டும் எளிமையை கண்டதாக தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் உள்ள அப்துல் கலாம் இல்லத்திலிருந்து நேற்று தனது அரசியல் பயணத்தை நடிகர் கமலஹாசன் ஆரம்பித்தார். அப்துல் கலாம் வீட்டில் அவரது சகோதரர் முகம்மது முத்து மீரான் மரைக்காயரை சந்தித்து கமலஹாசன்

## மலேசியப் பி... ஓவியருக்கு ...

(கோலாலம்பூர்)

மலேசிய பிரதமர் நஜிப் ரசாக்கை கோமாளி போல் சித்தரித்த பிரபல ஓவியர் பாஹ்மி ரேசாவிற்கு ஒரு மாத சிறைத்தண்டனையும், 7 ஆயிரத்து 700 டொலர் அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

மலேசியா பிரதமர் நஜிப் ரசாக்கை கோமாளி போல சித்தரித்து பிரபல

## இந்தியாவின் பெண்கள் புகையிரத நிலையமானது ஜெய்ப்பூர் காந்திநகர் புகையிரத நிலையம்



(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூரில் உள்ள காந்தி நகர் புகையிரத நிலையம் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் முதல் புகையிரத நிலையம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் முதலமைச்சர் வசுந்தரா ராஜே தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. இம் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில் அமைந்துள்ளது காந்தி நகர் புகையிரத நிலையம்.

தற்போது, இந்த புகையிரத நிலையத்தில் கண்காணிப்பாளர், பற்றுச்சீட்டுப் பரிசோதகர், புகையிரத நிலைய பொலிஸ், புகையிரத நிலைய தலைவர் (ஸ்டேஷன் மாஸ்டர்), பற்றுச்சீட்டு முன்பதிவு கிளார்க், பொறியாளர், பற்றுச்சீட்டு வழங்குபவர், புகையிரத பாதுகாப்பு படை உட்பட 32 பதவிகளுக்கு பெண் ஊழியர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில், காந்தி நகர் புகையிரத நிலையம் முற்றிலும் பெண் ஊழியர்களைக் கொண்டு இயங்கி வருவதால் இந்தியாவின் முதல் பெண் புகையிரத நிலையம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

இது தொடர்பாக வடமேற்கு புகையிரத அதிகாரிகள் தெரிவிக்கையில்,

ஜெய்ப்பூர் - டில்லி மார்க்கத்தில் அமைந்துள்ள காந்தி நகர் புகையிரத நிலையம் வழியாக தினமும் 50-க்கு மேற்பட்ட புகையிரதங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 25 புகையிரதங்கள் இந்த நிலையத்தில் நின்று செல்கின்றன.

இந்த பகுதியில் கல்லூரிகள், அலுவலகங்கள் இருப்பதால் இந்த புகையிரத நிலையத்திற்கு அதிகளவில் பெண்கள் வருகின்றனர். தினமும் 7000 பயணிகள் இந்த புகையிரத நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து வடமேற்கு மண்டல புகையிரத மேலாளர் டி.பி.சிங் தெரிவிக்கையில், இந்தியாவிலேயே பெண்கள் மட்டுமே நிர்வாகம் செய்யும் முதல் புகையிரத நிலையம் இது என்பதில் பெருமை கொள்கிறோம். ஆண்களுக்கு நிகராக பெண்களும் அனைத்து துறைகளிலும் சாதித்துக் காட்ட முடியும் என்பதற்கு இது ஓர் சிறந்த உதாரணம்.

இதற்கு முன்னதாக மும்பையின் மட்டுங்கா புகையிரத நிலையத்திலும் பெண்கள் மட்டுமே நிர்வாகம் செய்து வருகின்றனர். ஆனால் அது முக்கியமான நகர் பகுதியில் உள்ள புகையிரத நிலையத்தின் துணை வழித்தடம் தான் என தெரிவித்தார்.

வாரம் முழுவதும், 24 மணி நேரமும் இயங்கும் இந்த புகையிரத நிலையத்தில், கண்காணிப்பு கமராக்கள், சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## "கமல் வெறும் தலைப்புச் செய்தியே தலைவராக முடியாது" - தமிழிசை



(சென்னை),

கமல் தலைப்பு செய்தியாக இருக்கலாமே தவிர, தலைவராக முடியாது என்று, தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

தீவிர அரசியலில் இறங்கியுள்ள நடிகர் கமல்ஹாசன் நேற்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இல்லத்திலிருந்து, தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த நிலையில், நடிகர் கமல்ஹாசனின் அரசியல் பயணத்தை விமர்சித்துள்ள தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன்,

கமல் தலைப்பு செய்தியாக இருக்கலாமே தவிர, தலைவராக முடியாது. திரைப்பட போட்டியை போல் கமல் அரசியல் கட்சி தொடங்குகிறார் என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## சிரியாவில் உக்கிரம் அடைய... யுத்த நிறுத்தத்திற்கு ஐ.நா. ...



(டமாஸ்கஸ்)

சிரியாவின் கிழக்கு கௌட்டாவின் நிலைமை மிகவும் மோசமடைந்து வரும் நிலையில், யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு ஐ.நா.சபை வலியுறுத்தியுள்ளது.

மேற்படி பகுதியில் மோதலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவியளிக்கும் நோக்கிலும், மோதலில் சிகிச்சை அளிக்கும் நோக்கிலும், யுத்த நிறுத்தத்தை உடனடியாக முன்னெடுப்பது அவசியமெனவும் ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

கிழக்கு கௌட்டாவின் நிலைமை மிகவும் கவலைக்குரியதாகக் காணப்படுவதாக, சிரியாவுக்கான ஐ.நா. சபையின் இணைப்பாளர் Panos Moumtzis தெரிவித்துள்ளார்.

கிழக்கு கௌட்டாவில் படையினருக்கும் தீவிரவாதக் குழுவினருக்குமிடையிலான மோதல் கடந்த 18 ஆம் திகதி முதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், ஷெல் விமானத் தாக்கு

## நேருக்கு நேர் மோதிய... ஸ்தலத்திலேயே ஏழு ...

### தெலுங்கானாவி...

(ஐதராபாத்)

தெலுங்கானா மாநிலம் கானிமெட்டாவில் நேற்றுக் காலை இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 2 பெண்கள் உட்பட 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெலுங்கானா மாநிலம் வானபார்தி மாவட்டத்தில் உள்ள கானிமெட்டா என்ற இடத்தில் நேற்றுக் காலை ஐதராபாத்தில் இருந்து வந்த ஒரு காரும், எதிர்ப்புறம் வந்த இன்னொரு காரும் நேருக்கு நேர் மோதிக் கொண்டது.

இந்த கோர விபத்தில் 2 பெண்கள் உட்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.



மேலும், காயமடைந்த 4 பேர் சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்

# வெளிநாடு

## ...சஸ்தலத்திலிருந்து ஆரம்பமானது ...ாசனின் அரசியல் பயணம்




வாழ்த்துக்கள் பெற்றார். இதனை அடுத்து, கலாம் படித்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை வெளியே நின்று பார்த்தார்.

இந்நிலையில், கலாம் வீட்டுக்குச் சென்ற அனுபவம் தொடர்பாக தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பிரமிப்பூட்டும் எளிமையைக் கண்டேன். கலாமின் இல்லத்திலும், இல்லத்தாரிடமும். அவர் பயணம் துவங்கிய இடத்திலேயே நானும் என் பயணத்தைத் தொடங்கியதை பெரும்பேறாக நினைக்கிறேன் என கமலஹாசன் பதிவிட்டுள்ளார். (10)

## ஜூமாவின் ஊழல் குறித்து இந்தியாவில் விசாரணை

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா ஊழலில் கொள்ளையடித்த பணத்தை இந்தியாவைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் மூலம் பதுக்கி இருக்கலாம் என்பதால் இந்தியாவில் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர்.



தென்னாபிரிக்க நாட்டில் ஆபிரிக்க காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்து வருகிறது. இதன் தலைவராக ஜேக்கப் ஜூமா இருந்து வந்தார். அவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து அவரை பதவி விலகும்படி ஆபிரிக்க காங்கிரஸ் கட்சி கேட்டுக் கொண்டது. ஆனால் அவர் பதவி விலக மறுத்தார். எனவே அவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவதற்கு ஆபிரிக்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்தது. இதனால் ஜனாதிபதி பதவியில் இருந்து ஜேக்கப் ஜூமா இராஜினாமா செய்தார்.

இதன்பிறகு அவர் மீதான ஊழல் புகார் குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது. அவர் ஊழல் செய்த பணத்தை இந்தியா, சீனா, டுபாய் உள்ளிட்ட இடங்களில் முதலீடு செய்திருப்பதாக கருதப்படுகிறது.

எனவே இதுசம்பந்தமாக இந்தியா, சீனா, டுபாய் மற்றும் பல்வேறு நாடுகளில் விசாரிக்கப்பட்டு வருவதாக தென்னாபிரிக்க சட்ட அமைச்சர் பிக்கிலி மபுல்லா தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் இந்தியாவை சேர்ந்த அஜய் குப்தா மிகப்பெரிய தொழில் அதிபராக உள்ளார். அவர் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமாவின் நெருங்கிய நண்பராகவும் இருந்து வந்தார். இதன் காரணமாக அஜய்குப்தாவின் குடும்பத்தினர் ஆட்சியிலும் தலையிட்டதாக புகார் எழுந்தது.

மேலும், அஜய்குப்தாவுடன் சேர்ந்து ஜேக்கப் ஜூமா ஊழலில் ஈடுபட்டு இருப்பதாகவும் குற்றம்சாட்டப்பட்டது. அவ்வாறு ஊழல் செய்த பணத்தை அஜய்குப்தா மூலமாக இந்தியாவில் முதலீடு செய்திருக்கலாம் என கருதப்படுகிறது. எனவே இதுசம்பந்தமாக இந்தியாவில் விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ...ப் பிரதமரின் கேலிச்சித்திரம் ...க்கு ஒரு மாதம் சிறைத்தண்டனை




ஓவியர் பாஹ்மி ரேசா கேலிச்சித்திரம் தீட்டி இணையதளத்தில் வெளியிட்டார். இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக அவர் மீது அங்கு அந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

விசாரணையின் போது, பாஹ்மி ரேசா மீது ஆபாசமான, தவறான, அச்சுறுத்தலை ஏற்படுத்துகிற, ஒரு நபரை தொல்லை செய்ய விரும்புகிற இணைய உள்ளடக்கத்தை பரப்பியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு எதன் அடிப்படையில் விதிக்கப்படுகிறது என்பது குறித்து நீதிபதி எதுவும் குறிப்பிடவில்லை. இதை எதிர்த்து மேன்முறையீடு செய்வோம் என குறிப்பிட்டார்.

மேலும் இதே போன்று மற்றொரு நீதிமன்றத்தில் பாஹ்மி ரேசா இன்னொரு வழக்கை சந்தித்து வருகிறார்.

மலேசிய பிரதமர் நஜிப் ரசாக், அரசு பணத்தில் பல கோடி ஊழல் செய்ததாக எழுந்து உள்ள குற்றச்சாட்டு தொடர்பாக அரசுக்கு எதிராக செயற்படுகிற எதிர்க்கட்சி



அவருக்கு ஒரு மாத சிறைத்தண்டனையும், 7 ஆயிரத்து 700 டொலர் (சுமார் ரூ.5 இலட்சம்) அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

இது தொடர்பாக பாஹ்மி ரேசாவின் சட்டத்தரணி சியாரெத் சான் ஜோஹன் கூறும் போது, இந்த தண்டனை தலைவர்கள், ஆர்வலர்களுடன் இணைந்து, பாஹ்மி ரேசா செயற்பட்டு வருகிறார். போராட்டங்களிலும் பங்கு எடுத்து வருகிறார்.

இந்த ஊழல் தொடர்பான தகவல்களை வெளியிடுகிற இணைய தளங்களை மலேசிய அரசு முடக்கி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ...டையும் மோதல் ...நா. வலியுறுத்து

தல்கள் இடம்பெற்று வருகின்றன.

மேற்படி பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதலில், 66 பேர் உயிரிழந்ததாகவும் கடந்த 3 நாட்களில் சுமார் 250 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் ஆயிரத்து 200 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 54 சிறுவர்கள் அடங்குவதாகவும், மோதல் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், தீவிரவாதக் குழுவினரின் பிடியிலிருந்து கிழக்கு கௌட்டாவை மீட்பதற்கு முயற்சித்து வருவதாக, சிரிய இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். (10)

## ...திய கார்கள் ...ழு பேர் பலி ...னாவில் சோகம்



டுள்ளனர். விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (10)

## கிழக்கு இந்திய பெருங்கடலில் நுழைந்த சீனப் போர்க்கப்பல்களால் பரபரப்பு

(ஷாங்காய்)

மாலைதீவு பதற்றத்துக்கு இடையே கிழக்கு இந்திய பெருங்கடலில் சீனப் போர்க்கப்பல்கள் நுழைந்துள்ளன.



இந்திய பெருங்கடல் தீவு நாடான மாலைதீவில் அரசியல் குழப்பமான சூழலில், அந்த நாட்டின் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீத் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மாமூன் அப்துல் கயூம் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அங்கு நெருக்கடி நிலையை ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூம் அமுல்படுத்தியுள்ளார்.

மாலைதீவு விவகாரத்தில் இந்தியா இராணுவத்தை அனுப்பி தீர்வு காண உதவ வேண்டும் என்று அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும் மாலைதீவு பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையிடாமல், நிலைமையை உற்று நோக்கி வருகிறது. அங்கு தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில் 11 சீன போர்க்கப்பல்கள் கிழக்கு இந்திய பெருங்கடலில் நுழைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள சீன இணையத்தளம் (சினா. காம். சிஎன்.), "நீங்கள் கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் போர்க்கப்பல்களையும், தளபாடங்களையும் பார்த்தால். இந்தியா மற்றும் சீனா கடற்படைகளுக்கு இடையே பெரியளவில் இடைவெளி இல்லை" என செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்க சீன இராணுவ அமைச்சகம் மறுத்து விட்டது.


அதே நேரத்தில் கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் கடற்படையின் மீட்பு பயிற்சி நடவடிக்கைகள் பற்றிய படங்களை தனது இணையத்தளத்தில் சீன இராணுவம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (10)

## நியூஸிலாந்தை உலுக்கிய கீட்டா சூறாவளி

### ஐயாயிரம் பொதுமக்கள் பாதிப்பு

(வெலிங்டன்),

நியூஸிலாந்தின் தென் பகுதியில் அடை மழையுடன் கீட்டா (Gita) சூறாவளி தாக்கியுள்ளதைத் தொடர்ந்து பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள மக்கள் பலர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.



நியூஸிலாந்தில் கடந்த சில நாட்களாக அடை மழை பெய்து வந்த நிலையில், நியூஸிலாந்தின் தென்பகுதியில் கீட்டா சூறாவளி நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை தாக்கியதில் தென்பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதிக்கான தரைவழிப் போக்குவரத்தும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தென்பகுதியிலுள்ள சுமார் 5 ஆயிரம் பொது மக்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள அதே வேளை, நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் சிக்கியுள்ளதாக, அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளமையால் கிறிஸ்ட்சேர்ச் நகர் மற்றும் ஏனைய மாகாணங்களிலும் பாரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

சூறாவளி அபாயத்தால், கிறிஸ்ட்சேர்ச் நகர் உட்பட 4 பிராந்தியங்களில் அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

சூறாவளியைத் தொடர்ந்து கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளதுடன், ஆயிரக்கணக்கானோர் மின்சாரமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தத்தால் நியூஸிலாந்தில் 12க்கும் மேற்பட்ட பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மண்சரிவு ஏற்பட்டுள்ள பகுதியில் மீட்புப்பணி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அந் நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (10)

### லண்டனில் ஈழத் தமிழர்களின்

# கழுத்தை அறுப்பேன் என்று எச்சரித்த பிரிகேடியர் பிரியங்க நாடு திரும்புகிறார்

(லண்டன்)

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக செயற்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ நாடு திரும்பவுள்ளார்.

இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு அமைய பிரியங்க நாடு திரும்பவுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பிரித்தானிய தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களின் கழுத்தை அறுத்து விடுவேன் என சமிக்ஞை காட்டியமையினால் பாரிய சர்ச்சைகளுக்கு அவர் முகம் கொடுக்க நேரிட்டது.

அன்றைய தினம் அவர் சேவையில் இருந்து உடனடியாக நீக்கம் செய்யப்பட்ட போதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனைத் தடுத்தார்.

குறித்த இராணுவ அதிகாரி மரண அச்சுறுத்தல் விடுத்தார் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் ரயன், சிமோன் மெக்டெனோ மற்றும் போல் ஸ்கலி ஆகியோர் குற்றம் சுமத்தினர்.



எனினும் குறித்த இராணுவ அதிகாரி தவறு ஒன்றையும் செய்யவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவினால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த சம்பவம் ஓரளவு மூடி மறைக்கப்பட்ட நிலையில் கடந்த வாரம் மீண்டும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பிரித்தானிய தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது பிரித்தானியா பொது நலவாய சபை அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழர்களின் எதிர்ப்பின் பின்னர் பிரிகேடியர் பிரியங்க இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் மீள அழைக்கப்பட்டமைக்கான காரணம் பகிரங்கப்படுத்தப்படவில்லை. (இ-10)

# வெளிநாட்டில் இலங்கையர் மீது கொடூர இனவெறித் தாக்குதல்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் பகுதியில் இலங்கையர் ஒருவர் மீது கொடூர இனவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்ற நிலையில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான பெடி என்பவர் கடந்த 22 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளார்.

நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவரே குறித்த இலங்கையரைத் தாக்கும் வீடியோ காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

இந்த தாக்குதல் மேற்கொண்ட நபரிடம் இருந்து பெடி விலகி சென்ற போதிலும் குறித்த நபர் தொடர்ந்து தாக்குவதை வீடியோவில் அவதானிக்க முடிந்துள்ளது.

இதன் போது தனது நண்பர் இந்த சம்பவத்தை வீடியோவாக பதிவு செய்கின்றார் என குறித்த இலங்கையர் எச்சரித்துள்ளார்.

எனினும் குறித்த நியூசிலாந்து நாட்டவர் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி அவரை தொடர்ந்து தாக்கியுள்ளார்.

இவ்வாறான இனவெறித் தாக்குதல் நடந்தால் நாங்கள் எப்படி இந்த நாட்டில் வாழ்வது? எப்படி எனது குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது? சாரதியான எனது இந்த உழைப்பை தான் எனது குடும்பம் நம்பியிருக்கின்றது. இவ்வாறான அச்சுறுத்தும் சம்பவங்கள் நடந்தால் எப்படி வாழ்வது? என பெடி ஊடகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தினால் எனது காலில் பாதிப்பு ஏற்பட்டது. சில வாரங்கள் என்னால் நடக்க முடியாமல் போனது. தற்போது அவுஸ்திரேலிய மக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் பெடியின் காலில் பாதிப்பு ஏற்பட்டதனை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

குறித்த சம்பவத்திற்கு தொடர்புடைய 21 வயதான சந்தேக நபரை நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிடும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-10)

# நீதிமன்றில் நிற்க முடியாமல் தடுமாறிய விமல் வீரவன்ச



(கொழும்பு)


காலாவதியான கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முயற்சித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக வழக்கு ஒன்று இடம்பெற்று வருகிறது.

குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, கடந்த 2 நாட்களுக்கு முன்னர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் போது விமல் வீரவன்ச சாட்சி கூண்டில் நிற்க தடுமாறியுள்ளார்.

இதனால் வழக்கு விசாரணை நிறைவடையும் வரை நாற்காலியில் அமர்ந்திருப்பதற்கு சட்டத்தரணிகளின் ஊடாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய அங்கு அமர்ந்திருந்து சாட்சியளிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (இ-10)



# எரிவாயு விலை தற்போதைக்கு அதிகரிக்கப்படமாட்டாது-றிசாத்

(கொழும்பு)

எரிவாயு விலை தற்போதைக்கு அதிகரிக்கப்படமாட்டாது என்று வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக எரிவாயு சிலிண்டர்களுக்கான விலையை அதிகரிக்க அனுமதிக்குமாறு காஸ் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

எனினும் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தலைமையிலான வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கான அமைச்சரவை உபகுழுவின் அனுமதி இன்றி எரிவாயு விலையை அதிகரிக்க முடியாது என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தற்போதைக்கு எரிவாயு விலை அதிகரிக்கப்படமாட்டாது.

ஆனால் சில மாதங்களுக்குள்ளாக விலை அதிகரிப்பு சாத்தியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று உலக சந்தையில் ஏற்படும் விலை அதிகரிப்புக்கு ஏற்ப எரிவாயு விலையை அதிகரிப்பதற்கான சூத்திரம் ஒன்றை அமைச்சரவை அறிமுகப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் றிசாத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

# நாமும் நமது கருத்தும்!

நாம் வேறு; நம் கருத்து வேறு!

ஐயையோ! இப்படிப்பட்ட பயங்கர சித்தாந்த வேதாந்தக் கருத்தெல்லாம் எங்களுக்கு எதற்கு என்று பக்கத்தைப் புரட்டி விடாதீர்கள் கொஞ்சம் இருங்கள். இது சற்றுப் புதிய கண்ணோட்டம்.

இது ஒரு வித்தியாசமான கண்ணோட்டம். இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் நம்முடைய வீண் மனச் சங்கடங்கள் தவிர்க்கப்படும்.

நம் சட்டை கிழிந்துவிட்டால் தைக்கக் கொடுக்கின்றோம். அழுக்கானால் துவைக்கப் போடுகிறோம். இதுபோலத்தான் நம் கருத்தும். நம் கருத்து எதிர்க்கப்படும் போதும் அக்கருத்து மற்றவர்களால் கிழி கிழி என்று கிழிக்கப்படும் போதும் வீணே நம் தோலும் சதையும் பாதிக்கப்பட்டு விட்டதாகக் கருதிக் கொள்கிறோம். தவறு இங்கே தான் ஆரம்பிக்கிறது.

நம் கருத்துக்கு மதிப்புக் கிடைக்காத போது நாமே அவமானப்படுத்தப்பட்டதாக எண்ணிக் கொள்கின்றோம். இதனால் மனம் ரொம்பவும் சங்கடப்படுகின்றது.

நாம் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொள்ள மற்றவர்கள் என்ன இளிச்சவாயர்களா? அல்லது நாம் தான் அந்தக் காலத்து மன்னர்களா?

நாம் நமக்கிருக்கும் அதிகாரத்தை வைத்தும் அன்பைச் சாக்கிட்டும் நம் உரிமையை மற்றவர்கள் மீது திணிக்கப் பார்க்கின்றோம். இது எல்லாச் சந்தர்ப்பத்திலும் சாத்தியமா என்ன? கல்வி, நவீன தகவல் சாதன வளர்ச்சி ஆகியவை காரணமாக எல்லோருக்கும் கருத்து வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

எனவே நாம் எதைச் சொன்னாலும் மாற்றுக் கருத்து கிளம்புகிறது.

இதைப் புரிந்து கொள்ளாமல் நாம் ஒன்றைச் சொல்ல அதை மற்றவர்கள் மறுத்ததும் உடனே கௌரவப் பிரச்சினையாக்கி விடுகிறோம்.

சுயநலம் , சூழ்நிலை, மனநிலை ஆகியவை காரணமாக நம் கருத்திலே பல பிழைகள் நேருகின்றன.

அதுமட்டுமல்ல, நாமே கூட நினைத்து நினைத்துப் புரட்டிப் புரட்டிப் பேசுகிறோம். நம்முடைய இவ்வளவு ஆட்டத்திற்கும் எதிராளியும் சேர்ந்து ஆட வேண்டும் என எதிர்பார்ப்பது எந்த வகையில் சரி? நம்மையும் நம் கருத்தையும் பிரித்துப் பார்க்கும் மனப் பக்குவம் நமக்கு அவசியம் வரவேண்டும்.

அவர் மேல். எனக்கு எவ்வளவோ மதிப்பும் மரியாதையும் உண்டு. அவரை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். ஆனால் அவர் சொல்றதை என்னால் கொஞ்சங் கூட ஏற்றுக் கொள்ள முடியலை என்று மற்றவர்கள் நம்மையும் நம் கருத்தையும் பிரித்துப் பேசுகிறபோது நாம் மட்டும் ஏன் கூட்டுப் புழுவாகவே இருக்க வேண்டும்?

**லேனா தமிழ்வாணன்**

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான 150 சர்வதேச பிடியாணைகள் இரத்து!

## அரசு மீது உதயங்க பகிரங்க குற்றச்சாட்டு


(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சர்வதேச சிவப்பு அறிக்கையுடனான 150 பிடியாணைகளை ரத்துச் செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி டுபாயில் வைத்து ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவை சர்வதேச சிவப்பு அறிக்கை பிடியாணை அடிப்படையில் கைதுசெய்துஇலங்கைகொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்தது.

2006ஆம் ஆண்டு உக்ரைன் அரசாங்கத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மிக் விமானக் கொள்வனவில் ஊழல்கள் நடைபெற்றுள்ளதாகவும், குறித்த ஊழல் மோசடிகளில் உதயங்க வீரதுங்கவுக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகவும் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.



இந்த வழக்கின் அடிப்படையில் அவரை டுபாயில் வைத்துக் கைது செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

அவருக்கு எதிராக இன்டர் போல் பொலிஸாரின் சிவப்பு அறிக்கை எனப்படும் ரெட் நோட்டீஸ் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்று டுபாய் பொலிஸார் கைவிரித்து விட்டனர்.

எனினும் தற்போது அவருக்கு எதிராக சிவப்பு அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள நிதி மோசடிப் பிரிவு பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையே நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தனக்கு எதிராக சிவப்பு அறிக்கை பெற்றுக் கொள்ள முனையும் நல்லாட்சி அரசாங்கம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான சுமார் 150 சிவப்பு அறிக்கைகளை இரத்துச் செய்துள்ளதாக உதயங்க வீரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

பாரிய தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடைய விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிரான குறித்த சிவப்பு அறிக்கைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம் காரணமாகவே இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (இ-10)

# அமைச்சர் நிமாலை பிரதமராக்க 120 உறுப்பினர்கள் ஆதரவு!

## உதய கம்மன்பில தகவல்



(கொழும்பு)

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக்குவதற்கு 120 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளதென பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பிரதமரை பதவிநீக்க அரசாங்கம் காலதாமதப்படுத்தி வருவதன் ஊடாக மக்களின் எண்ணங்களை புறந்தள்ளி வருகின்றது.

மக் களின் அபிலாஷைகளை புறக்கணித்து பெரும் செல் வந்தர்களின் எண்ணங்களுக்கு அமைய நாட்டை முன்கொண்டு செல்ல தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அத்தோடு, இரண்டு தலைவர்களும் இணைந்து இந்த ஆட்சியை ஒற்றுமையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தமது நாடாளுமன்ற உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அப்படியாயின் அரசாங்கத்தை பாதுகாப்பதே எதிர்க்கட்சித் தலைவரினதும், பிரதம அமைப்பாளரினதும் நோக்கம் என்பது ஹன்சார்ட் பதவியிலிருந்து அறிந்துகொள்ள முடியும். நாம் பெரும்பான்மை பலத்துடனேயே உள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# தாமரை மொட்டில் அமைதியே நிலவும்

## தந்தையை எச்சரித்த சம்பந்தனுக்கு நாமல் பதில்

(கொழும்பு)

தாமரை மொட்டிலிருந்து அமைதியும் இணக்கமும் சுபீட்சமுமே மலரும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.




தமிழீழ கதைகளை கூறி சிங்கள மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றினால், கட்டாயம் தமிழீழம் மலரும் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவை, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் எச்சரித்ததன் பின்னணியில் நாமல் இந்தக் கருத்தை கூறியுள்ளார்.

இதுகுறித்து நாமல் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, 'அன்பினதும்கருணையினதும்குறியீடு தான் தாமரை மொட்டாகும்.

அதிலிருந்து அமைதியும் இணக்கமும் சுபீட்ச முமே மலரும்' என குறிப்பிட்டுள்ளார். (இ-10)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு சம்பந்தன் பொருத்தமற்றவர்

## ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குப் பொருத்தமற்றவர் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



மேல்மாகாண உறுப்பினரும், ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளருமான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, மேல் மாகாண சபையின் நேற்றுமுன்தினம் அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் விடயங்கள் தொடர் பாகவே நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கின்றது.

பொது வான பிரச்சினைகளில் எந்தவிதமான நாட்டமும் காட்டுவதில்லை.

அதேநேரம் சிற்சில வேளைகளில் அக்கட்சியானது அரசாங்கத்தின் சார்பாகவே செயற்படுகின்றது.

எனவே நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு அக்கட்சி பொருத்தமற்றது.

இந்நிலையில் மக்களின் ஆணை பெற்ற மகிந்த ராஜபக்ஷவுக்கே எதிர்க்கட் சித் தலைவர் பதவி வழங்க ப்பட வேண்டும் என்றும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளார். (இ-10)

# ஊழல் மோசடியாளர்களுக்கு தலைமைத்துவம் வேண்டாம்

## மார்ச் 12 அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைத்துவத்தை வழங்க வேண்டாம் என்று மார்ச் 12 அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மார்ச் 12 அமைப்பின் சார்பில் கொழும்பு, மருதானை சமூக மற்றும் சமாதானத்துக்கான மத்திய நிலையத்தின் அரங்கத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது நடைபெற்று முடிந்த தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் செயற்பட வேண்டிய விதம் குறித்து சிவில் அமைப்புக்களின் எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்தும் வகையில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது. மார்ச் 12 அமைப்பின் குறித்த செய்தியாளர் சந்திப்பில் அதன் இணைத் தலைவர்களில் ஒருவரான ரோஹண ஹெட்டியாராச்சி கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போது இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், உள்ளூராட்சி மன்றங்களை வெளிப்படைத்தன்மையுடனும், திறமையாகவும் வழிநடத்திச் செல்ல ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்பில்லாதவர்கள் தலைமைத்துவத்துக்குகொண்டுவரப்பட வேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி பொருத்தமானவர்களை உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைத்துவப் பதவிக்கு நியமிக்க வேண்டும்என்றும்ரோஹண ஹெட்டியாராச்சி தொடர்ந்தும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-10)

# அருட்சித்தர் குடைச்சுவாமிகள்

கந்தையா எனும் இயற்பெயரைக் கொண்ட குடைச்சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் கோண்டாவிலில் குமரகோட்டம் எனும் இடத்தில் அவதரித்தார். ஏறிய நெற்றியும் நீண்ட தாடியும் எக்கல் வயிறும் வேட்டியை முழங்காலுக்கு மேல் தூக்கிக் கட்டியபடி கக்கத்தில் ஒரு குடையுடன் கூனி நடந்து திரிபவர். மற்றவர்கள் உறங்கையில் விழித்திருப்பார். மற்றவர் விழித்திருக்க அவர் உறங்குவார். இரவு பகல் இல்லாமல் நடமாடுவார். இயல்பான கோலத்தில் காட்சியளிப்பார். தன்னை யாரென காட்டாமல் எளிமையான தோற்றத்தில் வீதியில் அங்கும் இங்குமாக திரிவார்.

இவருடைய போக்குகளும் வாக்குகளும் புதுமையான புதிரானவை.

இவர் வைக்கோலை எடுத்து விரித்து அதன் மேல் படுத்திருப்பார். தோட்டத்தில் மாடு கட்டும் தொட்டிகளில் கிடப்பார், கொத்திவிட்ட, உழுது விட்ட தோட்ட நிலங்களில் கிடந்து புரள்வார், உருள்வார். ஒரே நேரத்தில் பல இடங்களில் இவரைக் கண்டதாக பலர் சொல்வார்கள். மருதனார்மடம் சந்தியில் நிற்பார். அதே வேளை கோப்பாயில் வீதியோரம் நடந்து போவார். மோட்டார் வாகனங்களில் போகின்றவர்கள் இவரை பின் வல்லைவெளியில் கண்டதாகவும் கூறுவார்கள். படுக் கையில படுத்தறியாத சுவாமிகள் புதரும் முட்செடிகளும் குறிப்பாக நாக ராணி முட்செடிகளின் மேல் கொதிக்கும் வெயிலில் குடையைப் போட்டுவிட்டு அதற்கு மேல் படுத்திருப்பார்.

விபூதி, உருத்திராக்கம் எதுவும் அணியாதவர், தலையில் மொட்டையோ, காவி உடையோ கொள்ளாதவர். இயம, நியமங்கள் நேம நிட்டைகளென்ற சங்கற்பமெதுவுமே இல்லாத மகான். பேச்சினாலும் ஏச்சினாலும் குடையால் அடித்துப் திருவடி தீட்சையாலும் நயன தீட்சையாலும் அடியார்களுக்கு வாழ்வளித்தவர்.

சித்தத்திலே தெளிந்த சுவாமிகளினுடைய சில செயற்பாடுகளை கேட்கும் போதும் எழுதும்போது சிந்தையெல்லாம் தித்திக்கும். ஏதேனும் துன்பம் நிகழ்ந்தால் அல்லது பிரச்சினை வந்தால் சுவாமிகளை நினைத்தால் அல்லது அவரைக் கண்டால் உடனே விலகிவிடும் என்பது அவருடன் வாழ்ந்த மக்களின் எண்ணம். சுவாமியைக் கண்டாலே நல்லகாரியம் ஏதோ நடக்கப் போகிறது என்று எண்ணுவார்கள்.

ஒருமுறை கதிரைமலையன் என்பவருடைய மகளுக்கு விவாகப் பேச்சு. பணமில்லாத காரணத்தால் தவிர்த்து விட்டார் கதிரைமலையான்.

சாமியார் காலையிலே வந்து அவருடைய மனைவியை அழைத்து எங்கே அந்த மடையன்? என்று உரத்த குரலில் கத்தினார். கடலுக்குள்ளாலே பணம் மிதந்து வருகிறது. எம் பெருமானுக்கு தந்தி கொடுத்திருகிறேன் எனத் திருவாய் மலர்ந்தருளினார். அடுத்தநாள் அவர் மனைவியின் மாமனார் ஓடி வந்து நான் இப்பதான் மலேசியாவில் இருந்து வந்தேன். அத்தானை வந்து கல்யாணத்தைச் செய்யச் சொல்லுங்கோ பணவிடயத்தை நான் கவனித்துக் கொள்கிறேன் என்றார். சுவாமியார் தந்தி கொடுத்தது இவர்களுக்குத் தான் என்று பின்பு அவருக்குப் புரிந்தது.

சுவாமிகளைப் பலர் பின் தொடர்வார்கள். ஆனால் சுவாமி யாரையும் திரும்பிப் பார்ப்பதில்லை. சிலரைக் கண்டால் சால்லையால் அல்லது குடையால் முகத்தை மறைத்துக்கொண்டு ஓடுவார். பல கார் சாரதிகள் தங்களுடைய வாகனத்தில் சுவாமிகளை ஏற்றிச் செல்ல ஆசைப்படுவதுண்டு. ஆனால் சுவாமிகள் தனக்குப் பிடித்த காரை தானே மறித்து ஏறுவார். ஒருமுறை அன்பர் ஒருவருடைய வாகனத்தை மறித்து ஏறி சுவாமி அப்படிச்செல் இப்படித் திரும்பு என்று செல்ல வேண்டிய இடத்தைச் சொல்லாமல் வழியை மட்டும் காட்டிக்கொண்டிருந்தார். இடைவழியில் பெற்றோல் முடிந்துவிட்டது என்பதை உணர்ந்த சாரதி தயக்கத்துடன் அதை சுவாமிக்கு தெரிவிக்க தொடர்ந்து ஓடு எனக் கட்டளை இட்டார். பெற்றோல் இல்லாத வாகனம் தொடர்ந்து ஓடிற்று.

சுவாமிகள் மீது அளவுகடந்த காதல் கொண்டிருந்த இராசரத்தினம் அவர்கள் சுவாமிகளுக்கு கொடுப்பதற்காக ஒரு புதுக்குடை வாங்கி வைத்திருந்தார். சுவாமிகள் சமாதி அடைவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு அவருடையவீட்டிற்குச் சென்று குடையைக் கொண்டுவா என கூறி தனது பழைய குடையை அவரிடம் கொடுத்துவிட்டு புதுக்குடையை வாங்கிச் சென்றார். இராசரத்தினம் அவர்கள் தன்னுடைய பேபி ஸ்ரூடியோவில் சுவாமிகளுடைய படத்தையும் குடையையும் ஆதரித்து வந்தார். ஒருமுறை விமானக் குண்டுத் தாக்குதலில் பேபி ஸ்ரூடியோ சிதிலமடைந்த போதிலும் சுவாமிகளுடைய பெரிய படமும் குடையும் எவ்வித சேதமும் இன்றி கம்பீரமாக நின்றது நினைவு கூரத்தக்கது.

குடைச்சுவாமிகள் இலந்தை மரத்திற்கு கீழ் நின்று சால்வையை தோய்ப்பது போல பாவனை செய்து இடுப்பிலே கட்டிக்கொண்டு வேட்டியையும் கல்லிலே தோய்ப்பது போல அடித்துப் பிடித்து இடுப்பில் கட்டி சால்வையை போர்த்துக்கொள்வார். இதை இலந்தைக் குளியல் என்று அவரே சொல்லிக்கொள்வார். சிலசமயங்களில் புது ஆடைகளுடன் காட்சி தருவார். சில சமயங்களில் பழைய கந்தலான ஆடைகளுடன் காட்சி தருவார்.

சுவாமிகள் வாழும் காலத்திலேயே இராசரத்தினம் அவர்கள் சுவாமியுடைய படத்தினை கிருபா என்பவரின் உதவியோடு ஓவியம் தீட்டி அதனை கந்தர்மடம் வீரசிங்கம் என்பவரிடம் காட்டினார். வீரசிங்கம் அவர்கள் சுவாமிகளோடு நீண்ட காலமாக பழக்கத்தில் இருந்தவர். அவர் அவ் ஓவியத்தைப் பார்த்து எல்லாம் சரி. ஆனால் சுவாமிகளுடைய ஆடைதான் காவி நிறத்தில் உள்ளது. சுவாமிகள் வெள்ளை வேட்டி தானே அணிபவர் என்று சொன்னார். அடுத்தநாள் காலை வீரசிங்கம் அவர்களின் வீட்டிற்கு காவி ஆடையோடு வந்து அவரை மெய்சிலிர்க்க வைத்தார்.

காங்கேசன்துறையிலே சோதி சுவாமிகள் என்பவர் குடைச் சுவாமிகளைச் சந்திக்கப் போனார். சுவாமிகளைத் தேடி பல தூரம் நடந்தார். குடைச்சுவாமிகள் தன்குடையை விரித்து அவருக்குப் பிடித்து சோதி சுவாமிகளைக் கௌரவப்படுத்தினார்.

இது அப்பரும் சம்பந்தரும் சந்தித்த காட்சி போன்று இருந்ததாக குறிப்பிடுவார்கள். ஒருமுறை யோகர் சுவாமிகளை காண அன்பர்கள் வரிசையில் இருந்தபோது அவ்வரிசையில் குடைச்சுவாமிகளும் இணைந்து கொண்டார். குடைச் சுவாமியைக் கண்ட யோகர் சுவாமிகள் உனக்கு இங்க என்னடா வேலை எனக் கூறினாராம்.

ஸ்ரீமத் வடிவேற்சுவாமிகள், சபாரத்தினம் சுவாமிகள், முருகுப்பிள்ளை சுவாமிகள், மயில் வாகனம் சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், வைரலியார் சுவாமிகள் போன்ற பலரால் மதிக்கப்பட்டவர் குடைச்சுவாமிகள்.

''நடக்கும் செயலில் எல்லாம் நடக்கும்''

"அருள்வான் அருள்வாக்கு"

"அறிவான் அருள்வாக்கு"

''அருள்பார் அருள் தெரியும்''

"எம் பெருமான் நடத்துவார்''

போன்றன குடைச்சுவாமிகளின் மகா வாக்கியங்களாகும்.

இவர் மகாசமாதி அடைவதற்கு முதல் நாள் சென்னிப்பத்தையும் நந்தன்கீர்த்தனையும்படித்துக்கொண்டிருந்தார். அன்றுமுழுமையும் அருள்பார் பாஞ்சனன்யம் என்று சொல்லிக் கொண்டே இருந்தார். வடிவேல் சுவாமிகளுக்கு இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறு மணித்தியாலங்கள் தான் இருப்பேன் எனக் கூறிய வண்ணம் பிங்கள வருஷம் மாசி 2 ஆம் திகதி (14.02.78) செவ்வாய்க்கிழமை கார்த்திகை நட்சத்திரத்தில் அன்று சமாதிநிலை எய்தினார். கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் ஆசைப்பிள்ளை தலைமையில் சுவாமிகளின் சமாதி வைக்கப்பட்டது. சுவாமிகளின் சமாதி வைக்கப்பட்டபின் 40 தினங்கள் சிறப்பு ஆராதனை இடம்பெற்றது. அன்று வெள்ளிக்கிழமை மாலைப் பூஜை சிறப்பாக நடந்து கற்பூர ஆரத்தியின் பின் சில அன்பர்கள் வீடு சென்ற பின் சில அன்பர்கள் சமாதி அருகில் இருந்து பாணலிங்கத்தை பார்த்த வண்ணம் இருந்தனர்.

அது நிறையப் பூக்களால் மூடப்பட்டிருந்தது. அழகான சிவப்பு மலர். ரோஜா ஒன்று உச்சியில் இருந்து விழுந்து நிமிர்ந்து நின்றது. திடீரென சுவாமிகள் குடையும் தோளிற் சால்லை போட்ட முழுத் தோற்றத்துடன் காட்சியளிப்பதை வடிவேல் சுவாமிகள் கண்டிருக்கிறார்கள். புறப்படும் போதும் இக்காட்சி பற்றி வடிவேல் சுவாமிகள் சில அன் பர்களுக்கு கூறும் போது அவ்வன்பர்கள் தாமும் இக்காட்சியை கண்டதாகக் குறி மெய்சிலிர்த்தார்கள்.

காவித்துணி வேண்டா
கற்றைச் சடை வேண்டா
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துவதற்கு
எப்போதும் திருசரணம்
நினைவாய் நெஞ்சே
-மகாகவி பாரதி-

சித்தத்தை சிவன்பால் திருப்பி சித்தத்துள் குடிகொண்ட சித்தரை சிந்தையில் நினைத்தாலே இன்பமே.



மாசிமாத கார்த்திகை நட்சத்திரம் குடைச் சுவாமிகள் சமாதி தினம். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

அ.நளினாசினி
கோண்டாவில்.

# கம்பன் விழா பிற்போடல்

(கொழும்பு)

இவ்வாண்டு மார்ச் மாதம் 01, 02,03,04 ஆகிய திகதிகளில் நடைபெறுவதாய் இருந்த அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கொழும்புக் கம்பன் விழா கொழும்புக் கம்பன் கழகத் தலைவர் தெ.ஈஸ்வரன் மறைவையொட்டி பிற்போடப்பட்டுள்ளது.

அவ்விழாவினை எதிர்வரும் மார்ச் 29,30,31 ஏப்ரல் 1ஆகிய திகதிகளில் நடத்துவதென கொழும்புக் கம்பன் கழகம் முடிவு செய்துள்ளது. மார்ச் 29ஆம் திகதி மாலை வெள்ளவத்தை ஐஸ்வர்யலக்ஷ்மி திருக்கோவிலிருந்து கம்பன் பட ஊர்வலத்துடன் ஆரம்பமாகி ஏப்ரல் 1ஆம் திகதி மாலை நிறைவு பெறவுள்ளது.

வழமைபோலவே இவ் வாண்டும் நம் ஈழத் தமிழறிஞர்களோடு தமிழகத்திலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பல அறிஞர்கள் இவ்விழாவில் பங்கேற்கவுள்ளனர்.

இவ்விழாவில் எழிலுரை, சுழலும் சொற்போர், பட்டிமண்டபம், கவியரங்கம், சிந்தனை அரங்கம், கருத்தரங்கம், நாடக அரங்கம், வழக்காடு மன்றம் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில்உலகளாவிசாதனை செய்த அறிஞர்க்கான கம்பன் புகழ் விருதும், நம்சமுகத்தின் முன்னோடிகளாய்த் திகழும் அறுவர்க்கான சான்றோர் விருதும் வழமை போலவே வழங்கப்படவுள்ளதுடன் ''நாவலர் விருது'', "விபுலானந்த விருது", "ஏற்றமிகு இளைஞர் விருது'', "மகரந்தச் சிறகுவிருது", "நுழைபுலவிருது" ஆகிய விருதுகளும் புலமைசார் அறிஞர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவை தவிர இளைஞர்களை ஊக்குவிக்குமுகமாக நடத்தப்படும் கவிதைப் போட்டி, பேச்சுப்போட்டி, திருக்குறள்மனனப்போட்டிஎன்பனவும் இம்முறையும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் கலந்து கொள்ள விரும்பும் பேராளர்களும் மாணவர்களும் (மாணவர்கள் அதிபர் அல்லது பொறுப்பாசிரியருடாக விண்ணப்பிக்க வேண்டும்) கழகத்துடன் தொடர்பு கொண்டால் விழாவில் அவர்களுக்கான இருக்கை, உணவு வசதிகள் செய்து தரப்படும் என கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

விழா நாட்களில் மண்டப வாயில் பிரபல புத்தகப் பதிப்பாளர்களால் புத்தகக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது. இக்கண்காட்சியில் இலக்கிய ஆர்வலர்கள் மலிவு விலையில் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளும் ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளது எனவும் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக கழகத்துடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் 2360525, 077 293 5509 என்ற இலக்கங்களில் ஒன்றுடன்தொடர்புகொண்டுபேசலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# தலைமைத்துவப் பயிற்சி முகாமில் அதிபர் மரணம் எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர் ஆர்ப்பாட்டம்





(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் முகாம் ஒன்றில் அம்பாந்தோட்டை தேசிய பாடசாலை பெண் அதிபர் ஒருவர் மரணமடைந்தமை தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை கல்வி நிர்வாக வளாகத்திற்கு முன்னால் குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களால் நேற்று இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (இ)

# செய்தியாளர் சந்திப்பை புறக்கணித்த தயாசிறி




(கொழும்பு)

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில், அமைச்சரவை இணைப்பேச்சாளர்களில் ஒருவரான தயாசிறி ஜெயசேகர கலந்துகொள்ளவில்லை.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு, அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் ராஜித சேனாரட்னவும் கயந்த கருணாதிலகவும் இணைப் பேச்சாளர்களாக செயற்பட்டனர். எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும் இச் சந்திப்பில் கலந்துகொள்ள வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் கடந்த வருட இறுதிப் பகுதியிலிருந்து சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர் தயாசிறி ஜயசேகர அமைச்சரவை இணைப்பேச்சாளர்களில் ஒருவராக செயற்பட்டு வருகின்றார். இந்நிலையில், கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் அமைச்சரவையை மாற்ற வேண்டும் என்றும் பிரதமரை பதவி நீக்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த மற்றும் தயாசிறி ஜெயசேகர ஆகியோர் ரணிலை பதவி நீக்குமாறு பகிரங்கமாக அமைச்சரவையில் நேற்று முன்தினம் கோரியதாக தெரிவிக்கப்படுகிறது. அதற்கு முன்னரும் ஜனாதிபதியை பிரத்தியேகமாக சந்தித்து, தயாசிறி கலந்துரையாடியிருந்தார். இவ்வாறான பின்னணியில் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் அவர் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கைக்கு பாத்திரமாக செயற்பட்ட தயாசிறி, கடந்த 2013ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியுடன் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1336

Search for people, places and things — Nagendram Home

### ஹர்சினி

அழகான பொண்ணு சிரிச்சிட்டு போன
அடுத்த இரண்டு செக்கனுக்குள்ள பையன் கட்டுற
மனக்கோட்டை இருக்கே



ராஜராஜசோழனாலகூட கட்ட முடியாது...!

### திவ்வியா

எந்த வீட்டில கணவன் இருக்கிற இடத்துக்கே
கோப்பியும் சாப்பாடும் வருதோ



அந்த வீட்டுக்கு ஊரிலிருந்து சொந்தக்காரங்க
வந்திருக்காங்கன்னு அர்த்தம்

### ராகுலன்


நாம ஏன் இப்படி சோம்பேறித்தனமா
இருக்கோம்னு கண்டுபிடிக்க யோசிச்சேன்



ஒரே அலுப்பா இருந்துச்சு விட்டுட்டேன்...
நாளைக்கு கண்டுபிடிப்போம்...

### றெபேக்கா

இப்படியெல்லாம் நடக்கும்னு கனவுலகூட
நினைச்சுப் பார்க்கக்கூடாது...
மணமானவர்கள் நலன்கருதி...



### சுவேக்கா

என்ன உலகமடா இது!



மதிய சாப்பாட்டுக்கு அப்புறம் ஆழ்ந்து
கண்ண மூடி சிந்திச்சா தூங்குவதாக
நினைக்கிறது இந்த உலகம்! ச்சே!

### கிருத்திகா

பொங்கல் தீபாவளிக்கெல்லாம் வாழ்த்துச்
சொன்னா Same to you ன்னு சொல்றாங்க



லவ்வர்ஸ் டேக்கு I Love You சொன்னா
திட்டிட்டுப் போறாங்க...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஒரு வருடத்தை எட்டிய போராட்டம் ஏறாவூரில் பட்டதாரிகள் கவனயீர்ப்பு




(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று முற்பகல் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் தொழில் உரிமை கோரிய சாத்வீக போராட்டம் கடந்த ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டும், உரிய நியமனங்கள் வழங்கப்படாததை கண்டித்தும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் கலந்து கொண்ட வேலையற்ற பட்டதாரிகள் கருத்து தெரிவிக்கையில்,

தொழில் உரிமை கோரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரினால் பல்வேறு உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

இருப்பினும் குறித்த உறுதிமொழிகள் முறையாக நிறைவேற்றப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் பல்வேறு வேலைவாய்ப்புகள் உள்ள போதிலும் பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்கு பொதுச்சேவை ஆணைக்குழு தொடர்ந்து பின்னடித்து வருகின்றது.

எமக்கான தொழில் உரிமையினை நல்லாட்சி அரசாங்கம் பூர்த்தி செய்யாவிட்டால் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என பட்டதாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# அமைச்சர் சுவாமிநாதனுடன் த.தே.கூ. எம்.பி.பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்த பேச்சுவார்த்தை நேற்றுக்காலை இடம்பெற்றது.

இதன்போது அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்களில் இந்துமத விவகார அலுவல்கள், நீர்ப்பாசனக் குளங்கள், வீடமைப்பு, புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கலந்துரையாடலில் ஆலையடிவேம்பு இந்துமாமன்ற தலைவர் வே.சந்திரசேகரம், பிரதம கணக்காளர் எஸ்.கனகரத்தினம், செயலாளர் ஆ.அமிர்தானந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணில்–நிமால் சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் பதவிப் போட்டியில் களத்தில் குதித்திருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் நேருக்கு நேர் சந்தித்திருந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க அகற்றப்பட்டு அப்பதவி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிற்கு வழங்கப்படவேண்டும் என கடந்த சில நாட்களாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பரிந்துரை செய்திருந்தனர்.

இதன் காரணமாக நிமாலுக்கும் ரணிலுக்கும் இடையில் கடுமையான மனக்கசப்புகள் ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தேசிய பொருளாதார சபையின் கலந்துரையாடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

இதன்போது பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடலில் இருவரும் பல கருத்துக்களை முன்வைத்திருந்ததுடன், தமக்கு இடையிலான மனக்கசப்புகளை கைவிட்டு நட்புறவுடன் உரையாடிக் கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதி, மைத்திரி, அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஜோன் செனவிரத்ன, சரத் அமுனுகம, மலிக் சமரவிக்கிரம, மங்கள சமரவீர உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (இ-10)

# பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமில்லை கட்சித் தலைவர்கள் சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவ விகிதம் கட்டாயமில்லை என்று கட்சித்தலைவர்கள் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையில் பெண்களுக்கு 25 வீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது புதிய சட்டவிதியாகும்.

எனினும் இந்த சட்டவிதி காரணமாக பல உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் மற்றும் பட்டியல் உறுப்பினர்களை நியமிப்பதில் கட்சிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன.

இதன் காரணமாக பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான சரத்தை புறக்கணித்து செயற்படுவது என்றும் உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவம் சாத்தியமற்றது என்ற முடிவுக்கும் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரும் இத்தீர்மானத்தை ஆதரித்துள்ளனர். (இ-10)

# தகவல் தொழில்நுட்ப நகர் மக்களைப் பாதிக்காது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஹோமாகமையில் அமைக்கப்படவுள்ள தகவல் தொழில்நுட்ப நகர் எந்தவகையிலும் பொது மக்களைப் பாதிக்காது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகமையில் அமைக்கப்படவுள்ள தகவல் தொழில்நுட்ப நகரம் காரணமாக சுமார் 7 ஆயிரம் வரையான பொது மக்கள் பாதிக்கப்படவுள்ளதாக வெளிவந்துள்ள தகவல்கள் குறித்து கொழும்பு ஊடகமொன்று அமைச்சரிடம் வினவியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

7 ஆயிரம் பொது மக்கள் பாதிக்கப்படும் கருத்து தோல்வியுற்ற அரசியல்வாதிகளின் பொய்ப்பிரசாரமாகும்.

தகவல் தொழில்நுட்ப நகரம் அமைக்கப்படுவதற்கு சுவீகரிக்கப்படும் பொது மக்களின் காணிகள் தொடர்பில் முன்னறிவித்தல் கொடுக்கப்படும். அத்துடன் பொருத்தமான இழப்பீடும் வழங்கப்பட்டே அக்காணிகள் சுவீகரிக்கப்படும்.

அதனை விடுத்து பொது மக்களுக்குப் பாதிப்பான வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட மாட்டாது. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு வாக்களித்த மக்களுக்கு அவ்வாறான பாதிப்புகள் ஏற்பட ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# கல்லூரிக்காக தொண்டமான் வழங்கிய காணிக்கு தீ வைப்பு

(ஹற்றன்)

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட ஹற்றன் ஹைலன்ஸ் ஆரம்பப்பிரிவு பாடசாலைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் அதன் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமானால் பெற்றுக் கொடுக்கப்பட்ட 200 ஏக்கர் காணிக்கு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதோடு குறித்த கல்லூரியின் பக்கம் தீ பரவி வந்த போதிலும் ஹற்றன் டிக்கோயா நகரசபை ஊழியர்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளதாக ஹற்றன் - டிக்கோயா நகரசபையின் தீயணைக்கும் படையினர் தெரிவித்தனர். (இ-7)

# 'பூகோளவாதம் புதிய தேசியவாதம்' நூல் வெளியீடு யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

மு. திருநாவுக்கரசு எழுதிய "பூகோளவாதம் புதிய தேசியவாதம்" நூல் வெளியீடு நாளை மறுதினம் 24 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-9)



கப்பூது மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கமக்கார அமைப்பினரின் ஏற்பாட்டில் ஸ்ரீ கந்தசுவாமி அரைக்கும் ஆலை மற்றும் விவசாய நிலங்களுக்கு வேலி அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு என்பன கரவெட்டி பிரதேச செயலர் ஸ்ரீமோகனன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். (படங்கள்:-மகாலிங்கம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த

# நூலகக் கண்காணிப்பாளருக்கான நேர்முகத்தேர்வு இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெறவிருந்த நூலக கண்காணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களை இணைத்து கொள்வதற்கான நேர்முகத் தேர்வு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் போராட்டத்தையடுத்து இடைநிறுத்தப்பட்டது.

இந்த போராட்டத்தின்போது பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ள ஊழியர் சங்கத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

2017 ஆம் ஆண்டு சகல பல்கலைக்கழகங்களிலும் போதனைசாரா ஊழியர்களின் ஆளணி மீளாய்வு செய்யப்பட்டு புதிய ஆளணிகள் உருவாக்கப்பட்ட போது ஏற்கனவே இருந்த ஆளணிகள் இல்லாது செய்யப்பட்டன. இதனால் பல போதனைசாரா ஊழியர்களுக்கு அவர்களின் தர உயர்வுகளிலும் கடமை பட்டியலிலும் சம்பள அளவுத் திட்டத்திலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஆளணி மீளாய்வு பணியின் போது தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடப்படாமையே இதற்கான காரணமாகும்.

இப் பிரச்சினைகளை கருத்திற் கொண்ட அனைத்து பல்கலைக்கழகங்களின் தொழிற் சங்க கூட்டுக் குழு அண்மையில் இடம்பெற்ற நாடளாவிய ரீதியான பல்கலைக்கழக தொழிற்சங்க போராட்டத்தின் போது இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று பிரதான கோரிக்கையாக முன்வைத்திருந்தது.

இத் தொழிற்சங்க போராட்டங்கள் தொடர்ச்சியான போராட்டமாக இம்மாத இறுதி பகுதியிலிருந்து இடம்பெறக் கூடிய ஏதுநிலை காணப்படும் சூழ்நிலையில் ஏற்கனவே இதற்கான முன்னறிவித்தல் வழங்கப்பட்ட நிலையில் முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் நூலக கவனிப்பாளர்களை வெளிவாரியாக தெரிவு செய்வதற்கான நேர்முகதேர்வுகள் நடைபெறுவதானது ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

இதனால் அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழு எம்மை எச்சரித்து குறித்த நேர்முக தேர்வை நிறுத்துமாறு யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோருமாறு எம்மிடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. இதனை அடுத்து கடந்த மாசி மாதம் 15, 16 ஆம் திகதிகளில் துணைவேந்தருக்கு எழுத்துமூலமான கோரிக்கை ஒன்றை விடுத்திருந்த போதும் சாதகமான பதிலேதும் கிடைக்கவில்லை.

நூலக கண்காணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களையும் தெரிவு செய்வதற்கான நேர்முக தேர்வுகள் நடாத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே இருந்த தொழிலாளர்களுக்கான 14 ஆளணிகள் இல்லாதொழிக்கப்பட்டு 13 நூலக கவனிப்பாளர் தரம் III ஆளணியும் ஒரு வேலை உதவியாளர் ஆளணியும் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் ஆளணி, எழுதுவினைஞர், கணனிப் பிரயோக உதவியாளர், சுருக்கெழுத்தாளர் வெற்றிடங்கள் அனைத்தையும் சேர்த்து முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள் 107 யாழ்.பல்கலைக்கழகத்தில் உடனடியாக நிரப்பப்படவுள்ளன. நூலக கவனிப்பாளர்தரம் III பதவிநிலையிலேயே இதுவரை காலமும் புதிய நூலக கவனிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

தற்போது அவர்களின் தரநிலை குறைக்கப்பட்டதால் அவர்களின் சம்பள அளவுத் திட்டமும் குறைவடைந்துள்ளது. அத்துடன் தொழிலாளர் பதவி நிலை இல்லாதொழிக்கப்பட்டதால் நூலகத்தில் இதுவரை தொழிலாளர்கள் ஆற்ற வந்த பணிகளையும் நூலக கவனிப்பாளர்களே ஆற்ற வேண்டியுள்ளது.

இல்லாதொழிக்கப்பட்ட தொழிலாளர் ஆளணிகள் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என்பதே தொழிற் சங்க கூட்டுக் குழுவின் நிலைப்பாடாகும். நூலக தொழிலாளர்கள் உட்பட சிரேஷ்ட தொழிலாளர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்படவுள்ளனர்.

அவ்வாறே வெளிவாரியாக முகாமைத்துவ உதவியாளர்கள் தெரிவு செய்யப்படுவதற்கும் முன்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டவாறு, எழுதுவினைஞர்கள் கணனி பிரயோக உதவியாளர்கள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், புத்தக காப்பாளர்கள், களஞ்சிய காப்பாளர்கள், காசாளர்கள் ஆகியோர் முகாமைத்துவ உதவியாளர்களாக உள்வாங்கப்பட வேண்டும். முகாமைத்துவ உதவியாளர்களுக்குரிய கல்வித உயர்தர தகைமை இல்லாதோர்க்கு அவர்களின் சேவை அனுபவங்களின் அடிப்படையிலேயே உள்வாங்கல் நடைபெறும்.

அவ்வாறு உள்வாங்கப்படும் திகதி அடிப்படையிலேயே அவர்களின் சேவை மூப்பு கருத்திற் கொள்ளப்படும். எனவேதான் உள்வாங்கல் நடைமுறை தொடர்பான உரிய தீர்மானம் எடுக்கப்படாமல் புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் இவர்களின் சேவை மூப்பிலும் சம்பள அளவுத் திட்டத்திலும் தர உயர்வுகளிலும் எதிர்காலத்தில் பிரச்சினை ஏற்படுத்தும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-4)

# அரசின் இலக்குகளை அடைவதற்கு நல்லிணக்க அலைவரிசை உதவும்

## அமைச்சர் மங்கள நம்பிக்கை



(கொழும்பு)

நாட்டின் நல்லிணக்கத்திற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நல்லிணக்க அலைவரிசை பாரியளவில் வலுச்சேர்க்கும் என்று நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நல்லிணக்க அலைவரிசை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

அரசாங்கத்தின் இலக்குகளை அடைந்துகொள்ள இந்த அலைவரிசை உதவும். நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொள்ள தமிழ் - சிங்கள - முஸ்லிம் - மலே - பர்கர் உள்ளிட்ட சகல தரப்புக்களும் இணைந்து செயற்பட்டார்கள். சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட இன - குல முரண்பாடுகளினால் யுத்தத்திற்கும், இரண்டு புரட்சிகளுக்கும் முகங்கொடுக்க நேர்ந்தது.

2015ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன நாட்டை புதிய திசைக்கு எடுத்துச் சென்றதாகவும் ஜனாதிபதி கடந்த காலப்பகுதிகளில் 17 தடவைகள் வட பகுதிக்கு சென்றுள்ளதோடு, பிரதமர் ஒன்பது சந்தர்ப்பங்களில் வடமாகாணத்திற்கு விஜயம் செய்திருப்பதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-10)

# தெலுங்கு மொழி பேசும் மக்கள் இலங்கையிலும் வாழ்கின்றனர்

## மாநில அரசு தகவல்



(டில்லி)

இலங்கையிலும் தெலுங்கு மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது என, இந்திய ஆந்திர மாநில அரசு தகவல் வெளியிட்டுள்ளது.

தெலுங்கு மொழி பேசும் மக்கள் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை கண்டறியும் நடவடிக்கையில் ஆந்திரப் பிரதேச அரசு ஈடுபட்டுள்ளது.

அந்த தேடுதலில் தெலுங்கு மொழி பேசுபவர்கள் இலங்கையிலும் வாழ்ந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அகிகுந்தாசா என்ற பழங்குடியின மக்கள் ஆவர்.

இவர்கள் பல நூற்றாண்டாக இலங்கையில் வாழ்கின்றனர். அந்த இனம் அழிந்து வருகிறது. நூற்றுக் கணக்கானோர் மட்டுமே இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகவலை ஆந்திர பிரதேச கலாசார ஒன்றியத்தின் தலைமை செயல் அதிகாரி தெரிவித்தார்.

இலங்கையை இறுதியாக ஆண்ட மன்னர் இவர்களை இங்கு அழைத்து வந்து இருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசிற்கு எச்சரிக்கை விடுத்துள்ள முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம்

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணத்தை உயர்த்தப் போவதாக இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கையை சாரதிகள் சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்த்தன ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கை மூலம் விடுத்துள்ளார்.

முச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்களுக்கான விலை கடந்த சில மாதங்களுக்குள் 150 மடங்கு அதிகரித்து விட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக உதிரிப்பாகங்கள் பொருத்துதல், பராமரிப்பு செலவுகள் என்பன கடுமையாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அரசாங்கம் தலையிட்டு உதிரிப்பாகங்களின் விலைகளைக் குறைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இல்லாவிட்டால் வேறு வழியின்றி எதிர்வரும் மார்ச் மாத கடைசியில் இருந்து முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணத்தை உயர்த்த நேரிடும் என்றும் சுனில் ஜெயவர்த்தன தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைக்கு முதலாவது கிலோமீற்றருக்கு 50 ரூபா அறவிடும் முச்சக்கர வண்டி சாரதிகள், அதற்கடுத்த கிலோமீற்றர்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு 40 ரூபா வீதம் அறவிடுகின்றனர்.

எனினும், கட்டணம் அதிகரிக்கப்பட்டால் ஆரம்பம் முதல் பயண முடிவு வரை கிலோமீற்றர் ஒன்றுக்கு 50 ரூபா வீதம் அறவிடப்படும் என்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் அறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (இ-7)

# உடனடியாக் கைது செய்யுங்கள் தொடரூந்து சாரதிகள் எச்சரிக்கை




(கொழும்பு)

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரவு நேர அஞ்சல் தொடரூந்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் விரைவில் கைது செய்யப்படவில்லை என்றால் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக தொடரூந்து சாரதிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது

மேலும், குறித்த தாக்குதல் சம்பவத்தினால், கொழும்பில் இருந்து திருகோணமலை வரையில் பயணிக்கும் தொடரூந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, திருகோணமலை பாலையூற்று பகுதியில் வைத்து பெண்ணொருவர் தொடரூந்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

அதனை அடுத்து குறித்த தொடரூந்தின் மீது அந்த பெண்ணின் உறவினர்கள் கல்லெறிந்து தாக்குதல்களை மேற்கொண்டதில், அந்த தொடரூந்தின் இயந்திரத்திற்கு கடும் சேதம் ஏற்பட்டது.

இதனைத் தொடரூந்து, மற்றுமொரு இயந்திரம் பொருத்தப்பட்டு அஞ்சல் தொடரூந்து 2 மணித்தியாலங்கள் தாமதித்து கொழும்பை சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

## பசியும் ருசியும்



பரணி ஆற்றங்கரையில் நின்றிருந்த ஓர் ஆலமரத்தின் பொந்தில் தாய்க்கிளியும் குஞ்சுக் கிளியும் வசித்துவந்தன.

கிளிக்குஞ்சு தானே இரை தேடும் அளவுக்கு வளர்ந்தாலும் இரை தேடுவதற்குத் தாய்க் கிளி இன்னும் அனுமதிக்க வில்லை.

ஆலமரத்தில் சிவப்பு வண்ணப் பழங்கள் அழகாகக் காய்த்துக் குலுங்கின. அதனால் தாய்க் கிளியும் நீண்ட தூரம் சென்று உணவு தேடாமல், தன் குஞ்சுடன் நேரத்தைச் செலவிட்டது.

"அம்மா, எனக்கு இந்த ஆலம் பழங்கள் சாப்பிட்டுச் சாப்பிட்டு சலிப்பாகிவிட்டது. கொய்யா, நாவல், சீதா, மிளகாய்ப் பழம் போன்றவற்றைச் சாப்பிடுவதற்கு ஆசையாக இருக்கிறது" என்றது குஞ்சுக் கிளி.

"இப்போது எங்கும் வறட்சி. பழங்களே கண்ணில் தட்டுப்படவில்லை. நல்லவேளை, ஆல மரத்திலாவது பழங்கள் இருக்கின்றன. அதனால்தான் இரை தேடிச் செல்லாமல் உன்னுடனே இருக்கிறேன்" என்றது தாய்க்கிளி.

"நேற்று என் அணில் நண்பன் வீட்டுக்கு ஒரு விருந்தினர் அணில் கூடை நிறைய கொய்யாப் பழங்களுடன் வந்திருந்தார். எனக்கும் ஒரு கொய்யா கிடைத்தது. அத்தனை சுவையாக இருந்தது. அதனால் நான் இன்று ஆலம் பழங்களைச் சாப்பிட மாட்டேன். எனக்குச் சுவையான பழங்கள் வேண்டும்" என்று அடம்பிடித்தது குஞ்சுக் கிளி.

"அவர் வெளியூர்க்காரராக இருப்பார். இங்கே கொய்யாப் பழங்களே இல்லை" என்ற தாயின் பேச்சைக் கொஞ்சமும் நம்பவில்லை குஞ்சுக் கிளி.

"சரி, நீயும் என்னுடன் வா. இருவரும் உணவு தேடலாம்" என்றதும் மகிழ்ச்சியுடன் கிளம்பியது குஞ்சுக் கிளி.

இரண்டும் பறக்கத் தொடங்கின. சிறிது நேரத்தில் முதல் முறை பறந்ததால் சோர்வுற்ற குஞ்சுக் கிளி, சற்று ஓய்வெடுக்க வேண்டும் என்றது. தாயும் குஞ்சும் ஒரு மரத்தில் ஓய்வெடுத்து விட்டு, மீண்டும் பறந்தன. நீண்ட நேரம் அலைந்தும் ஒரு பழம் கூடக் கிடைக்கவில்லை. இரண்டு கிளிகளும் மிகவும் களைப்புற்றன.

"அம்மா, இனிமேல் என்னால் பறக்க முடியாது. பொந்துக்குத் திரும்பலாம்" என்றது குஞ்சுக் கிளி.

குஞ்சுக்கிளியை அழைத்துக் கொண்டு ஆலமரத்தை நோக்கித் திரும்பி வந்தது தாய்க் கிளி. பொந்தில் ஏற்கெனவே பறித்து வைத்திருந்த ஆலம் பழங்கள் இருந்தன. பசியோடு இருந்த குஞ்சிடம் நீட்டியது தாய்க் கிளி.

உடனே வேக வேகமாகத் தின்று முடித்தது குஞ்சுக் கிளி.

"கண்ணே, பசி தீர்ந்ததா? பழங்கள் எப்படி இருந்தன?"

"பசி தீர்ந்தது அம்மா. அது எப்படி இப்போது மட்டும் பழங்கள் அத்தனை சுவையாக மாறின?" என்றது குஞ்சுக் கிளி.

"சற்று முன்பு நான் இந்த ஆலம் பழங்களைத் தந்தபோது வேறு சுவையான உணவு வேண்டும் என்றாய். ஆனால் இப்போது இந்தக் கனிகளே சுவையாக இருக்கிறது என்கிறாய். பசி இருந்தால் எந்த உணவும் ருசியாக இருக்கும். இந்தப் பசியை நீ உணர்வதற்காகவே நான் உன்னை வெகுதூரம் அழைத்துப் போனேன். களைத்துப் பசித்த உனக்கு ருசியும் தெரிந்துவிட்டது" என்று சிரித்தது தாய்க் கிளி.

## 02.2018 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1495- பிரான்ஸ் மன்னன் எட்டாம் சார்ள்ஸ் நேப்பில்சை அடைந்து அந்நகரத்தைக் கைப்பற்றினான்.
- 1658- டச்சுக்காரரினால் மன்னார் கைப்பற்றப்பட்டது.
- 1819- ஸ்பெயின் புளோரிடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்றது.
- 1862- அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவராக ஜெபர்சன் டேவிஸ் அதிகார பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1943- நாசி ஜேர்மனியில் வைட் ரோஸ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர்.
- 1948- செக்கோசிலவாக்கியா கம்யூனிசப் புரட்சி இடம்பெற்றது.
- 2002- இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வவுனியாவில் கைச்சாத்திடப்பட்டது.

### பிறப்புகள்

- 1732- சியார்ச் வோசிங்டன், ஐக்கிய அமெரிக்காவின் 1வது அரசுத்தலைவர் (இ. 1799)
- 1785- சான் சார்லசு அத்தனாசு பெல்த்தியே, பிரான்சிய இயற்பியலாளர் (இ. 1845)
- 1796- அடால்ப் குவெட்லெட், பெல்சிய கணிதவியலாளர், வானியலாளர் (இ. 1874)
- 1810- பிரடெரிக் சொப்பின், போலந்து இசையமைப்பாளர் (இ. 1849)
- 1857- பேடன் பவல், சாரணர் இயக்கத்தை ஆரம்பித்த ஆங்கிலேயர் (இ. 1941)
- 1857- ஐன்ரிக் ஏர்ட்சு, செருமானிய இயற்பியலாளர், மெய்யியலாளர் (இ. 1894)
- 1879- ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்டெட், டென்மார்க்கு வேதியியலாளர் (இ. 1947)
- 1892- எட்னா செயிண்ட் வின்சென்ட் மில்லாய், அமெரிக்கக் கவிஞர் (இ. 1950)
- 1898- தில்லையாடி வள்ளியம்மை, இந்திய விடுதலைப் போராட்டப் பெண் போராளி (இ. 1914)
- 1923- சுப்பையா சர்வானந்தா, இலங்கைத் தமிழ் நீதிபதி, வழக்கறிஞர், மேல் மாகாணத்தின் 1வது ஆளுநர் (இ. 2007)
- 1932- எட்வர்ட் கென்னடி, அமெரிக்க அரசியல்வாதி (இ. 2009)
- 1938- கோவை மகேசன், இலங்கைப் பத்திரிகையாளர், அரசியல்வாதி (இ. 1992)
- 1951- சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத், இலங்கைத் தமிழ்க் கல்வியாளர்
- 1974- ஜேம்ஸ் பிளண்ட், ஆங்கிலேயப் பாடகர், கித்தார் இசைக்கலைஞர்
- 1975- ட்ரூ பேரிமோர், அமெரிக்க நடிகை

### இறப்புகள்

- 1512- அமெரிகோ வெஸ்புச்சி, இத்தாலிய நாடுகாண் பயணி (பி. 1454)
- 1913- பேர்டினண்ட் டி சோசர், சுவிட்சர்லாந்து மொழியியலாளர் (பி. 1857)
- 1944- கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (பி. 1869)
- 2006- எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (பி. 1915)
- 2012- இரெமி ஒக்லிக், பிரான்சிய ஊடகவியலாளர் (பி. 1983)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (செயிண்ட் லூசியா, 1979)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 80 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 70 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 90 | 80 | 80 | 80 |
| தக்காளி | 40 | 40 | 30 | 30 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 25 | 40 | 40 | 30 |
| கோவா | 30 | 40 | 40 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 110 | 110 | 100 | 160 | 80 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 60 | 30 |
| புடோல் | 60 | 70 | 40 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 100 | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 85 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 40 | 100 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 40 | 80 | 50 | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 200 | 140 | 200 | 200 | 160 |
| பீற்றூட் | 40 | 40 | 35 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 150 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 450 | 350 | 500 | 800 | 700 |
| போஞ்சி | 60 | 100 | 80 | 80 | 160 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 60 | 50 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 20 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 20 | 30 | 50 | 50 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 30-80 | 100 | 75 | 80 |
| இராசவள்ளி | 180 | 180 | 140 | 160 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 20 | 85 | 80 | 120 | 100 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 15 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | – | 80 | 100 | 80 |

வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் உள்ள சத்தியத்தைப் பொறுத்தது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அரசியல் திருவிளையாடலை கண்டு களியுமினே!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் நாடுபூராகவும் அரசியல் திருவிளையாடல்கள் அரங்கேறியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து வீழ்த்த வேண்டும் என ஒரு தரப்பு கங்கணம் கட்டி நிற்கிறது.

ஆட்சியைப் பிடித்தே ஆவோம் என்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பின் நிலைப்பாடு.

இவை ஒருபுறமிருக்க, மகிந்த ராஜபக்ஷவின் கை ஓங்குவது அவ்வளவு நல்லதல்ல என்ற நிலைப்பாட்டில் அமெரிக்காவும் இந்தியாவும் மிகவும் கவனமாக இருக்கின்றன.

இந்த நாடுகளின் போக்கு தனக்கு உலை வைத்து விடுமோ என்ற ஏக்கம் மகிந்த ராஜபக்ஷவை உலுக்கவே செய்கிறது.

இவை ஒருபுறமிருக்க, வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக கடும் பிரயத்தனங்கள் நடந்து கொள்கின்றன.

சுருங்கக்கூறின் ஆடு, கீரை, புலி என்ற கதை போன்ற ஒரு மோசமான சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது யார் என்ற இழுபறிகள் உடனடியாகத் தீரப் போவதில்லை.

இதல் வேடிக்கை என்னவெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனக்குள் வைத்துக் கொண்டு காய்நகர்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை ஓரங்கட்ட நினைத்தார்.

நான் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் கதைக்க மாட்டேன் என்று தந்தி தொலைக் காட்சிக்கு செவ்வி வழங்கியவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இன்று பிரதமர் பதவியில் இருந்து ரணில் விலக வேண்டும் என்று கோசம் எழுப்புமளவில் அவரின் அரசியல் எதிர்காலம் அமைந்துள்ளது.

அதேசமயம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங்கக்கூடாது எனத் தடுத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சராகினால், அவருக்கான வாக்கு வங்கி அதிகரித்து விடும் என்ற பயத்திலேயே டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி வழங்கக்கூடாது என்பது கூட்டமைப்பின் நிலைப்பாடு.

ஆனால் இப்போது புதிய அமைச்சரவை அமைக்கும் பட்சத்தில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்பட்டால், அதனைத் தாம் எதிர்க்கமாட்டோம் என்றும், அதற்குப் பரிகாரமாக வடக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளில் தமது ஆட்சி அமைவதற்கு டக்ளஸ் தேவானந்தா மானசீகமாக ஆதரவு தர வேண்டும் என்பது போன்ற பண்டமாற்றுப் பேச்சுக்கள் நடப்பதான தகவல்களும் உண்டு.

இதேவேளை வடக்கு மாகாண சபையைக் குழப்பிய இளம் உறுப்பினர்கள் இப்போது கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதான செய்திகளும் வந்தவண்ணமுள்ளன.

கடவுளே! இது இங்கு என்றால் கிழக்கில் சூரியனுடன் சேர்ந்தால்தான் வீட்டுக்கு வெளிச்சம் என்ற நிலைமை இருக்கிறதாம்.

ஓ! கடவுளே உன் ஒட்டுமொத்தத் திருவிளையாடலும் இலங்கை அரசியலில் நுழைந்து விட்டதோ!

# ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்றுறையில் கர்ப்பிணி பெண் ஒருவரை படுகொலை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டின் சந்தேகநபர்களான சகோதரர்கள் இருவரின் விளக்கமறியல் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த இருவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம். எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த தவணையின் போது குறித்த வழக்கு விசாரணையை குற்ற புலனாய்வு பிரிவினருக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும், இதுவரை குற்ற புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை பொறுப்பேற்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (ம)

## நல்லாட்சி அரசாங்கத்தில் மகிந்த பாதுகாக்கப்படுவது உண்மையே – ராஜித

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நாம் எதிர்பார்த்தவாறு எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும் இது எவரால் தடைப்பட்டது என்பதை தான் அறியவில்லையெனவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்கின்றார் என்ற குற்றச்சாட்டொன்று சமூகத்தில் உள்ளது. ஜனாதிபதியும் இதற்கு சார்பாக கருத்துத் தெரிவித்திருந்தார் என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைக் கூறினார். (ம)

## டிரான் அலஸின் வழக்கு 23-ம் திகதி

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் உள்ளிட்ட நால்வருக்கெதிராக தொடரப்பட்டிருக்கும் வழக்கு நாளை 23 ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் விகும் கழு ஆரச்சி தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மக்களுக்கு வீடுகள் வழங்குவதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட 200 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தமை தொடர்பில் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ்க்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (இ-7)


## மானிப்பாய் மருதடி விநாயகர் மஹோற்சவ கலந்துரையாடல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவம் 22.03.2018 அன்று ஆரம்பித்து 15.04.2018 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவம் தொடர்பாக உபயகாரர்களுக்கும் பெறுநர் குழுவினர்களுக்குமிடையேயான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் ஆலய மஹோற்சவ உபயகாரர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்கி மஹோற்சவம் சிறப்புற அமைவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## சத்திய தரிசனம்



### தமிழில் ஒரு அருமையான சொல்

❖ நற்பண்புகள் கொண்ட தூய்மையான வாழ்க்கை மிகவும் முக்கியமானது. இறைப் பணியாக நமது வாழ்க்கையை மேற்கொண்டு தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும்.

❖ பஞ்ச பூதங்களாலான இயற்கை இறைவனின் சொரூபமாக விளங்குகிறது. இதன் தூய்மையை கெடுத்தால் நம்முடைய ஐம்புலன்களின் தூய்மை பாழடையும். மனமும் மாசடையும், இயற்கையைப் பாதுகாத்தால் இறைவனை வழிபட்டவர்களாக மாறுவோம். இதுவே நாம் முன்னேற வழி.

❖ கடவுளிடம் "மன அமைதியைக் கொடு" என்று வேண்டிக் கொள்ளுங்கள். அதுவே நியாயமான பிரார்த்தனை.

❖ நாக்கின் ருசி, நாக்கின் பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதைப் பொறுத்துத் தான் உங்கள் வாழ்க்கை இருக்கிறது. இதைச் சரியாகச் செய்தால் பிற பலன்கள் தாமாகவே வந்து சேரும்.

❖ தமிழில் "அருள்" என்று ஒரு சொல் உள்ளது. அது சமஸ்கிருதத்தில் "தர்மம்" என்ற சொல்லுக்கு இணையானது. வேறு எந்த மொழியிலும் இப்படி ஒரு சொல் இல்லை. தர்மத்தை நாம் காப்பாற்றினால் அது நம்மை காப்பாற்றும்.

## வெற்றிலையை மென்றவாறு மீன் விற்ற பெண்ணுக்கு தண்டப் பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

யாழில் வெற்றிலையை மென்றவாறு மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண்ணுக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் தண்டப் பணம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த பெண் மீது பொதுச் சுகாதார பரிசோதகர் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன்போது குறித்த பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் 3 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப் பட்டது. (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### ஓலை வீடுகளின் மகத்துவம் என்ன?

இரண்டு வகையான ஓலைகள் உள்ளன. தென்னை ஓலை, பனையோலை இரண்டும் வீடு மேய்வதற்குச் சிறந்தவைகளாகும். ஓலை வேய்ந்த வீடுகளில் கடும் உஷ்ணமோ கடுங் குளிரோ தாக்குவதில்லை. ஓலை வேய்ந்த வீடுகளில் ஒவ்வொரு வருடமும் ஓலைகளை மாற்றிப் புதுப்பிக்க வேண்டும். அந்த நேரங்களில் வீட்டிற்குள்ளும் வீட்டைச் சுற்றிய பகுதிகள் முழுவதும் சுத்தம் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றன. பழைய ஓலைகள் வேலியாகவும் எரிப்பதற்கும் பயன்படுகின்றன. ஓலை மேய்வதற்குப் பெரியளவில் செலவு பிடிக்காது, பொருளாதார இலாபம், வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எளிது, பார்வைக்கு அழகு, சமமான சீதோஷ்ண நிலை இவையெல்லாம் ஓலை வேய்ந்த வீடுகளின் சிறப்பம்சங்களாகும். பழைய காலத்தில் ஓலை வேய்ந்த வீடுகளே அதிகமாக இருந்தன.

பனை ஓலைதான் எழுத்து ஓலையாகப் பயன்படுத்தப் பட்டது. எழுதிப் பார்க்க வேண்டிய விடயங்களை ஓலையில் எழுத்தாணியால் எழுதி பாதுகாப்பாக கட்டி வைக்கலாம். தேவைப்படும்போது எடுத்துப்படித்துவிட்டு மீண்டும் பத்திரமாக வைத்துக் கொள்ளலாம். வெகு நாட்களுக்குப் பின் ஓலை மங்கத் தொடங்கினாலும் எழுத்தாணியால் எழுதப்பட்ட எழுத்துக்கள் அழியாது.

இன்றைய சிலேட், பென்சில், நோட்டு ஆகியவற்றின் ஸ்தானத்தில் அந்தக் காலத்தில் பனை ஓலைகளே இருந்தன. வீடு மேய்வதற்கு தென்னை ஓலையையும் எழுதுவதற்குப் பனையோலையையும் பயன்படுத்துவார்கள். சில இடங்களில் வீடு மேய்வதற்கு பனை ஓலையையும் பயன்படுத்துவதுண்டு. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் கோவிலகுளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரிய கூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், குருக்கள் புதுக்குளம், குருக்களுர், பறயனாலங்குளம் ஒரு பகுதி, ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பூ-ஓயா படை முகாம், ஈரப் பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, சாளம்பைக்குளம் பிரதேசம், சாளம்பைக்குளம் புதிய வீட்டுத்திட்டம், பூந்தோட்டம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து சம்பியனானது நவஜீவன்ஸ்



கரணவாய் வடக்கு நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம், தமது 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், வடமராட்சியின் சவால் வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவந்தது.

20 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய, இந்தச் சுற்றுப்போட்டியில் முதற் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றது. முதற்சுற்றிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, இரண்டாம் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்றது. தொடர்ந்து அரையிறுதிக்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

அந்தவகையில் நவிண்டில் கலைமதி, வதிரி டயமன்ஸ், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில் றேஞ்சர்ஸ் அணி வென்றது.

இறுதிப்போட்டி 18 ஆம் திகதி இரவு மின்னொளியில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில் நவஜீவன்ஸ் அணி, 2:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

சிறந்த கோல் காப்பாளராக நவஜீவன்ஸ் அணியின் ரஜீவனும், ஆட்டநாயகனாக அதே அணியின் சே.சஞ்சீவனும், தொடர் ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் பா.சுதாகரனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

# கனடா தேசிய அணியின் ஈழத் தமிழனுக்கு பாராட்டு

நியூசிலாந்து, அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் கனடா தேசிய அணியில் விளையாடிய முல்லைத்தீவு குமுழமுனையைச் சேர்ந்த பத்மநாபன் யோகா தம்பதியரின் மகன் அரனுக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட விளையாட்டு பிரிவின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.



இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் கோ.தனபாலசுந்தரன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மீ.யேசுறெஜினோல்ட் ஆகியோரின் வாழ்த்துரையுடன் மற்றும் மாவட்ட பதிவாளர், அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கனடா தேசிய அணியில் விளையாடியும் முல்லைத்தீவு மாவட்டத்தை சொந்த இடமாக கொண்டமைக்காக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் கௌரவிக்கப்பட்டதையிட்டு அவரது பெற்றோர் அகமகிழ்ந்து பெருமைப்பட்டு நன்றி கூறியதுடன் விளையாட்டு வீரர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு துறைக்கும் தம்மாலான முழுமையான சேவையை வழங்க இருப்பதாக உறுதி கூறினார். (க)

# லாராவை பின்னுக்குத் தள்ளி தான் அமர்ந்து கொண்ட கோலி



சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் விராட் கோலி 909 புள்ளிகளுடன் தற்போது முதலிடத்தில் இருக்கிறார். எல்லா காலத்திலும் சேர்த்து ஐ.சி.சி. ஒருநாள் போட்டியின் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் மேர்கிர் விவியன் ரிச்சர்ட்ஸ் 935 புள்ளிகள் (1985ஆம் ஆண்டு) எடுத்ததே அதிகபட்சமாகும்.

ஒட்டுமொத்தமாக அதிக புள்ளிகள் எடுத்தவர்களின் பட்டியலில் பாகிஸ்தானின் ஜாகீர் அப்பாஸ் (931 புள்ளி) 2-வது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் கிரேக் சேப்பல் (921 புள்ளி) 3ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் டேவிட் கோவர் (919 புள்ளி) 4-வது இடத்திலும் அவுஸ்திரேலியாவின் டீன் ஜோன்ஸ் (918 புள்ளி) 5ஆவது இடத்திலும் பாகிஸ்தானின் ஜாவித் மியாண்டட் (910 புள்ளி) 6-வது இடத்திலும் உள்ளனர்.

இதற்கு அடுத்து 7ஆவது இடத்தில் கோலி இருக்கிறார். இதுவரை 908 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் முன்னாள் தலைவர் பிரையன் லாரா, கோலியின் வருகையால் 8ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். (க)

# இந்த நாடுகளில் மட்டும்தான் டெஸ்ட் அணி நிலைத்திருக்கும்

டெஸ்ட் கிரிக்கெட்டின் மோகம் குறைந்து வருகிறது.



அடுத்த 10 ஆண்டுகளில் 5 நாடுகள் மட்டுமே டெஸ்டில் விளையாடும். இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மட்டுமே ஆடும் என இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார். மேலும், மற்ற அணிகள் ஒருநாள் போட்டியில் ஆடுவதைதான் விரும்பும்.

நியூ சிலாந்து, இலங்கை ஆகிய நாடுகள் டெஸ்டில் இருந்து சென்றுவிடும். இவ்வாறு பீட்டர்சன் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை-பங்களாதேஷ்- இந்தியா முக்கோணத் தொடர் ஆரம்பம்




இந்திய கிரிக்கெட் அணி தற்போது தென் ஆபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. எதிர் வரும் 24ஆம் திகதி இந்த தொடர் முடிகிறது.

அடுத்து இந்திய அணி இலங்கையில் நடைபெறும் 3 நாடுகள் 20 ஓவர் போட்டியில் பங்கேற்கிறது.

மார்ச் 6ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடக்கிறது. 3ஆவது நாடாக பங்களாதேஷ் கலந்து கொள்கிறது. ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். 'லீக்' முடிவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

6ஆம் திகதி நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் இந்தியா- இலங்கை அணிகள் மோதுகின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆவதையொட்டி இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. போட்டிகள் அனைத்தும் கொழும்பு பிரேமதாஸ ஸ்டேடியத்தில் மின்னொளியில் நடக்கிறது.

போட்டி அட்டவணை:-

மார்ச் 6 - இலங்கை VS இந்தியா

மார்ச் 8 - பங்களாதேசம் VS இந்தியா

மார்ச் 10 - இலங்கை VS பங்களாதேசம்

மார்ச் 12 - இந்தியா VS இலங்கை

மார்ச் 14 - இந்தியா VS வங்காளதேசம்

மார்ச் 16 - பங்களாதேஷம் VS இலங்கை

மார்ச் 18 - இறுதிப் போட்டி (க)


உலக காசநோய் தினத்தை முன்னிட்டு யாழ்.மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தினரால் நடத்தப்படும் 9 பேர் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மாபெரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி.

மேற்படி சுற்றுப்போட்டிக்காக உள்ளூர் கழகங்கள் திணைக்கள விளையாட்டுக்கழகங்கள் விண்ணப்பிக்க முடியும்.

பதிவுக்கட்டணம் :- ரூ. 600.00

விண்ணப்ப முடிவுத் திகதி :- 28.02.2018 புதன்கிழமை

1ஆம் பரிசு :- 25,000.00

2ஆம் பரிசு :- 15,000.00

மற்றும் வெற்றிக்கேடயங்கள், பதக்கங்கள் என்பன வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்களை யாழ்.மார்பு நோய் சிகிச்சை நிலையம், பண்ணையில் பெற்றுக்கொள்ள முடியும். 28.02.2018 இற்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தொடர்புகளுக்கு

திரு.சோ.ரூபதாஸ், பொது சுகாதார பரிசோதகர், மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்.

077 967 2371

## தேசிய அரசாங்கம்...

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள ஜனாதிபதி .மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றி பெற்றதை அடுத்து ஏற்படுத்தப்பட்டிருந்த அரசியல் நெருக்கடியை அடுத்து மைத்திரி-ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிடையே கடும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையிலேயே நேற்று இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றம் நேற்றைய தினம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட அறிவித்தலொன்றை விடுத்தார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து அமைத்த தேசிய அரசாங்கம் தொடர்ந்தும் அமுலில் இருப்பதாக பிரதமர் ரணில் அறிவித்தார்.

அரசியல் யாப்பிற்கு அமைய நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்பவே தேசிய அரசாங்கத்தை அமைத்ததாகவும் இதற்கமைய தேசிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய தேவை இன்னமும் எழவில்லை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் .மகிந்த அமரவீர கருத்துத் தெரிவிக்கையில், தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கைக்கு அமைய அதிலுள்ள விடயதானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்-ஐக்கிய தேசியக் கட்சியும் கட்டுப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம)

## தேசிய அரசை தொடர்...

நாடாளுமன்றத்தில் நேற்று தேசிய அரசாங்கம் தொடர்பில் விளக்கமளிக்கும்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் இணைந்து தொடர்ந்து தேசிய அரசாங்கத்தை முன்கொண்டு செல்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், தேசிய அரசாங்கத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வலகவில்லை என்று கூட்டமைப்பின் பொது செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர சபையில் விளக்கமளித்தார்.

இதன்படி ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கும் இடையில் தேசிய அரசாங்க உருவாக்கத்துக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்ந்தும் செல்லுபடியாகும் என்று அவர் கூறினார்.

இதனை அடுத்து எழுந்த ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, தேசிய அரசாங்கத்துக்கான ஒப்பந்தம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துடன் காலாவதியாகியுள்ள நிலையில், மீண்டும் ஒப்பந்தம் செய்துக் கொள்ளாமல் தற்போதைய அமைச்சரவையை அங்கீகரிக்க முடியாது என்று கூறினார்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் பைசர் முஸ்தபா, உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்பு சபையில் குறித்த உடன்படிக்கையை நீடிப்பதாக அறிவித்ததன் பின்னர் அது குறித்து மூன்றாம் தரப்பு கேள்வி எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்தார்.

தொடர்ந்து எழுந்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, ஒப்பந்தம் செய்து கொண்ட இரண்டு கட்சிகளும் ஒப்பந்தத்தை நீடிப்பதாக அறிவித்துள்ள நிலையில் இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டியதில்லை என குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இது கணவன் மனைவி குறித்த விடயம் அல்லவென்றும் அரசாங்கம் சம்பந்தப்பட்டது என்பதால் தற்போது தேசிய அரசாங்கத்தின் பங்குதாரிகள் இணக்கம் கண்டுள்ள நிலையில், எதிர்வரும் தினங்களிலேனும் புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்து, நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு அவர் கோரினார்.

இதற்கு பதில் வழங்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கு எந்த விதமான ஆவணங்களும் அவசியமில்லை என்று குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கான எந்த ஆவணங்களும் இல்லை.

இலங்கையில் முதன்முறையாக அவ்வாறான அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டதாலேயே தாம் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு அனுமதித்ததாக பிரதமர் குறிப்பிட்டார்.

இதன்போது எழுந்த பிவித்துரு ஹெல உறுமயவின் செயலாளர் உதயகம்மன்பில, தேசிய அரசாங்கத்தை உருவாக்க ஆவணங்கள் தேவையில்லை என்ற பிரதமரின் கூற்று, பிழையான முன்னுதாரணமாக பின்பற்றப்படக்கூடும் என்று சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் அரசாங்கங்கள் தேசிய அரசாங்கத்தை உருவாக்கிவிட்டதாக வாய் மூலம் அறிவித்து விட்டு, தமக்கு ஏற்றாற் போல அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

எனவே இந்த விடயத்தில் அரசியல் யாப்புக்கு அமைவாக பிரதமர் செயற்பட வேண்டும் என்று கம்மன்பில கோரினார்.

இதற்கு பதில் வழங்கிய பிரதமர், தாம் இங்கிலாந்தின் நாடாளுமன்றத்தை உதாரணமாக மேற்கோள்காட்டியது, தேசிய அரசாங்கத்தை உருவாக்க ஆவணங்கள் அவசியம் இல்லை என்பதை எடுத்துக்காட்ட மாத்திரமே என்றும் அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பாக இல்லை என்றும் விளக்கமளித்தார்.

எவ்வாறாயினும் இந்த விடயத்தில் சட்ட ரீதியான பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து ஆராய்ந்து அறிவிப்பதாக, சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். (ம)

## மாகாண சபைத்...

மேற்கொண்டவர்கள் தற்போது அனுபவிப்பதாக குறிப்பிட்ட கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், வாக்குறுதி அளித்தவாறு ஏப்ரல் மாதத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபைக்கான எல்லை நிர்ணயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழு, அதன் அறிக்கையை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைஷர் முஸ்தபாவிடம் கையளித்துள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களாக 222 பேரை தெரிவுசெய்வதற்கான இந்த அறிக்கையை அனைத்துக் கட்சிக் குழு கூட்டத்தில் விவாதிப்பதற்கு முன்னர் அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் நிபுணத்துவம் உள்ளவர்களிடம் வழங்க வேண்டும் என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் வலியுறுத்தியுள்ளார். (ம)

## தேசிய அரசாங்கத்தின்...

உடன்படிக்கை என்னவென்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய அரசாங்க கால எல்லை மீறியுள்ள நிலையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தில் தொடர்ந்தும் நீட்டித்துக் கொண்டுசெல்ல முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

தேசிய அரசாங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் செயற்படும் என பிரேரணையில் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த பிரேரணையில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இந்த பிரேரணையினை சாதாரணமாக முன்வைக்க முடியாது.

இதற்கு இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட வேண்டும். ஆகவே இந்த பிரேரணையை முன்வைக்க முன்னர் இணக்கப்பாடு ஒன்றினை எட்டவேண்டிய தேவை உள்ளது. தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்ட பின்னரே இவ்வாறான பிரேரணை ஒன்றினை முன்வைக்க முடியும்.

ஆகவே தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக அன்று பாராளுமன்றத்தில் நீங்கள் தெரிவித்தீர்கள். அதற்கு அமையவே அமைச்சரவை அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற இந்த பிரேரணையையும் நீங்கள் முன்வைத்துள்ளீர்கள். ஆகவே தேசிய அரசாங்கத்தின் கால எல்லை வரையில் இந்த பிரேரணை செயற்படவேண்டும். தேசிய அரசாங்கத்தின் கால எல்லை முடிவடையும் நிலையில் இந்த பிரேரணையும் நிராகரிக்கப்பட்டுவிடும். அப்படியாயின் தேசிய அரசாங்கம் குறித்து செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை என்ன. அந்த உடன்படிக்கை என்னவென்பதையே நாம் கேட்கின்றோம்.

ஆகவே அடுத்த கால கட்டத்திற்கான தேசிய அரசாங்கம் முன்னெடுத்து செல்லும் உடன்படிக்கைகளை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதேபோல் அமைச்சரவையினை அதிகரிப்பது குறித்து மீண்டும் பாராளுமன்றத்தில் அனுமதியினை பெற வேண்டும். ஆகவே அரசியலமைப்புக்கு முரணான வகையில் இனியும் அமைச்சரவை செயற்பட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

# யுத்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்பை விட விபத்தால் ஏற்படும் உயிரிழப்பு அதிகம்

## வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட வீதி விபத்தால் ஏற்படும் உயிரிழப்புக்களே அதிகமாகவுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தினர் இணைந்து நடத்திய வடக்கு மாகாண திணைக்களங்கள் மற்றும் சாரதி பயிற்சி பாடசாலை பயிற்றுநர்களுக்கு வீதி விபத்து, போக்குவரத்து முறைபற்றிய கருத்தமர்வு நேற்று யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வயது வந்து முதியவர்களாகி இறப்பது என்பது இயற்கையான விடயம். ஆனால் இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள் இறந்தால் அதற்கான காரணத்தை நாம் தேட வேண்டும். அதற்கான பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இன்றைய தொழில்நுட்ப உலகில் அனைத்து விடயங்களிலும் அனைவரும் அதி வேகமாக செயற்படுகிறார்கள்.

குறிப்பாக அதிவேகமாக வாகனங்களை செலுத்தி அநியாயமாக உயிர்களை கொலை செய்வதுடன் தாமும் பாதிக்கப்படுகிறார்கள்.

விபத்தை ஏற்படுத்தினால் மனச்சாட்சிக்கு ஏற்றது போல் நடந்துகொள்ளவேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பவர்கள் மனிதர்கள் அல்ல. விபத்தை ஏற்படுத்தினால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற முன்வர வேண்டும்.

யுத்தத்தால் பலர் இறந்துள்ளார்கள். ஆனால் யுத்தத்தின் பின்னர் அதை விட கூடுதலான எண்ணிக்கையானவர்களை நாம் இந்த வீதி விபத்துக்களினால் இழந்துள்ளோம்.

யுத்தத்தில் உயிர்கள் பறிக்கப்பட்டமைக்காக யுத்தம் புரிந்தவர்களை திட்டுகிறோம், கேள்விகேட்கிறோம் ஆனால் இந்த வீதி விபத்தை ஏற்படுத்தி உயிர்களை பறிப்பவர்களை கேள்வி கேட்பது யார்?

எனவே உயிரின் மதிப்பை உணர்ந்து சாரதிகள் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(ம-9)

## இரத்தவாந்தி எடுத்த...

நாகேஸ்வரன் (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறிந்த நோயாளி இரத்தவாந்தி எடுத்த நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலை அவசரப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் குறித்த நோயாளி மேலதிக சிகிச்சைக்காக நேற்று இரவு திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இந்நிலையில் குறித்த நோயாளி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-281)

## மகிந்தவின் பதவியை...

டும் என அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு மேலும் இரண்டு வருடங்களுக்கு மக்களின் ஆணை இருக்கின்றது. சுமார் 500 நாட்கள் மீதமுள்ளன.

எவர் ஆட்சியமைப்பதாக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் 116 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

ஐக்கிய தேசியக்கட்சியோ, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ எதுவாக இருந்தாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என சரத் அமுனுகம குறிப்பிட்டுள்ளார். (ம)

## இரா.சம்பந்தனுடன்...

குழுத் தலைவரான தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம்.

இதில் சம்பந்தனுடன் எந்தவித பிரச்சினையும் இல்லை. அத்துடன் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் கீழ் உறுப்பினர்களாகத் தாம் செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## பிரதமர் பதவியை...

வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியை அமைக்கும் தேவை ஜனாதிபதிக்கு இருந்தால், அதற்கு கூட்டு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியை நீக்கி விட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தை அமைக்க போவதாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கூறினார். எனினும் தற்போது அந்த நிலைப்பாடு மாறியுள்ளது.

எவ்வாறாயினும் மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியை வழங்க அழைத்தால், அரசாங்கத்தை அமைக்கும் விதத்தையும் 114 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக் கொள்ளும் விதத்தையும் காண்பிக்க முடியும் என குறிப்பிட்டுள்ளார். (ம)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி (ஒஸ்காலேன் அருகில்) உரும்பிராயில் உள்ள புதிய வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :

(2848) 077 069 0275

அறிமுகம் - Rs. 250/=

## சிக்கன் பிரியாணி

ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில்

49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg

கனடா - 1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-1566)

தொடர்புகளுக்கு: 0768226240

●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

V2 TRAVELS

## பதவி வெற்றிடம்

அரச அங்கீகாரத்துடன் இலங்கையில் பல வருடங்களாக முகாமைத்துவத் துறையில் பயிற்சியுடன் பல நிரந்தர தொழில்வாய்ப்பினை வழங்கிவரும் DNMC கம்பனி மேலும் பல நிரந்தர தொழில்வாய்ப்புக்களை வழங்கவுள்ளது. தகைமைகளுக்கேற்ப பதவிகள் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 076 666 8385, 021 567 9001

(2879)


# ஒன்பது வயது மாணவியை வன்புணர்ந்த...

யாழ். தீவகம் நாரந்தனைப் பகுதியிலுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப் பகுதியில் தரம் 4 இல் கல்வி கற்ற 9 வயது மாணவி ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபரே தன்னை வன்புணர்வுக்குட்படுத்தினார் என மாணவி தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட பாடசாலை அதிபர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் பாதிக்கப்பட்ட மாணவி நீதிமன்றின் உத்தரவில் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் சந்தேகநபருக்கு எதிராக சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டை முன்வைத்து யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் வழக்கின் தீர்ப்புக்காக நேற்று திகதியிடப்பட்டது.

நீதிபதி தனது தீர்ப்பை அறிவிக்கையில் அதிபர் ஆசிரியர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும். வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிட்டது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது கல்வி கற்பதற்காகவே.

ஆனால் பாடசாலையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிபர், மாணவி ஒருவரை வன்புணர்வுக்குட்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே இந்தக் குற்றவாளிக்கு வழங்கப்படும் தீர்ப்பு அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாடமாக அமைய வேண்டும்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமியின் சாட்சி, சிறுமியின் தாயார் மற்றும் அவரது நண்பியின் சாட்சிகளும் மன்றில் முன்வைக்கப்பட்டன.

எனினும் சிறுமி நடத்தை கெட்டவள் என்று எதிரி தரப்பால் மன்றில் புதுக்கதை சோடிக்கப்பட்டது. 9 வயதுச் சிறுமி 2 இளைஞர்களுடன் பாலியல் தொடர்பை வைத்திருந்தாள் என அவளின் தாயார் கூறியதாக எதிரியும் அவரது மனைவியும் மன்றில் சாட்சியமளித்தனர்.

இந்த விடயம் இப்போதுதான் எதிரி தரப்பால் வெளிப்படுத்தப்படும் கதையாகும். எனினும் எதிரி தரப்பால் மன்றில் முன்நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள், மாணவியின் நடத்தைக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

எனவே சிறுமியால் கூறப்பட்ட சாட்சியத்தையும் மருத்துவ அறிக்கையையும் வைத்து இந்த மன்று எதிரியைக் குற்றவாளியாக அறிவிக்கின்றது.

குற்றவாளியான பாடசாலை அதிபரின் கட்டுப்பாட்டுக்குள்தான் பாடசாலை இருந்துள்ளது. அவரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள்தான் மாணவி இருந்துள்ளார். அரச அலுவலர் ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பெண்களையோ சிறுவர்களையோ பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்துவது கடுமையான குற்றமாகும். அவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்குவது கட்டாயமானதாகும் என தெரிவித்து தீர்ப்பை அறிவித்தார்.

குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு குற்றவாளி 10 இலட்சம் ரூபாய் இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும். தண்டமாக 10 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும்.

செலுத்தத் தவறின் ஒரு மாதகால கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என உத்தரவிட்டார். (ம-9)

## 2 வாரங்களில்...

எடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமாகிய ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதற்கான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் இந்த நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டவுடன் தினமும் வழக்கு விசாரணை இடம்பெறும் எனவும் அமைச்சர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம)

## பெற்றோலுக்கு...

தினத்திலும் தீர்க்கப்படாவிட்டால் இன்று முற்பகலில் இருந்து பணி பகிஷ்கரிப்பை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தகவலை பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கத்தின் ஊடகப் பேச்சாளரான பந்துல சமன் குமார வெளியிட்டார்.

அதிகாரிகளிடம் இதுவரை விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே நேற்று புதன்கிழமை மாலை அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையிலும் முடிவெடுக்கப்படவில்லை என்பதால் இன்றையதினம் காலை வரை கெடு விதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை அண்மைய மாதங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நடத்திய பணிபகிஷ்கரிப்பு காரணமாக நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 12 வீதத்தினால்...

கம் மதுவுக்கான வரியைக் குறைத்தன் பின்னரே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், மதுவரித்திணைக்களம் கடந்த மாதங்களில் வெளியிட்ட தரவுகளின் மூலம் இந்த விடயம் தொடர்பில் அறியக்கிடைத்துள்ளதாகவும், புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் மொத்த மதுபாவனையில் 18 வீதம் மது நுகர்வு காணப்படுவதாகவும் அந்தத் தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நுகர்வு வீதத்தில் அதிகரிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளதாக தெரிவித்த புகையிலை மற்றும் மது பானம் மீதான தேசிய அதிகார சபையானது, இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபையின் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அத்தோடு, மது நுகர்வு அதிகரித்தமை தொடர்பான அறிக்கையை ஜனாதிபதிக்கும், சுகாதார அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மக்கள் நிராகரித்த போதும்...

பத்தரமுல்ல - ரஜமல்வத்த விபஸ்ஸனா தியான மண்டபத்திற்கு விஜயம் செய்த அவரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் நாளாந்தம் வீழ்ச்சி போக்கிற்கே முகங்கொடுத்து வருகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஒவ்வொரு கோணங்களிலிருந்து செயற்படுகின்றனர். தேசிய அரசாங்கத்தின் ஒப்பந்த காலம் காலாவதியாகியுள்ளது.

இது தொடர்பில் சபாநாயகர் உரிய தீர்மானம் ஒன்றை எட்ட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். (ம)

## கூட்டு அரசாங்கம்...

ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர சந்திப்பில் அவர் இவ் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி ஏற்படுத்திய நல்லாட்சி அரசாங்கம் தொடர்பான இரண்டு வருட கால ஒப்பந்தம், கடந்த 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாத நிலையில், உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாக நல்லாட்சி அரசாங்கத்தை தொடர்வது குறித்து பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இந்நிலையில், அதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படுமென ராஜித தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


## கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

GUNA BEST PC 0779086737

லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்

LAPTOP COMPUTERS CCTV CAMERA

REPAIR SALE PURCHASE INSTALLATION

கணினி மதர்போட் சிசிரீவி திருத்தம் விற்றல் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.

(C-1674)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(2864)

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

(1394)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co என்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்பப் பிரிவு, A/L 2019, 2018 மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்தின் புள்ளிவிபரம்.

(I.C.T)

A/L 2018 SERIAL EXAM - 1.0

| Name | School Name | Marks |
|---|---|---|
| N.Ramsi | J/Vembadi Girls' High School | 78 |
| S.Kajanthan | J/Yarlton College Karainagar | 76 |
| S.Visurathan | J/Central College | 72 |
| S.Senthuran | J/Yarlton College Karainagar | 70 |
| T.Piraveenan | Jaffna Hindu College | 66 |
| A.Janushan | J/Kokuvil Hindu College | 62 |

A/L 2019 SERIAL EXAM - 5.0

| Name | School Name | Marks |
|---|---|---|
| S.Jenarthani | J/Skandavarodaya College | 88 |
| N.Gowthaman | J/Skandavarodaya College | 78 |
| K.Shamini | Jaffna Hindu Ladies College | 75 |
| R.Tharsika | Jaffna Hindu Ladies College | 75 |
| J.Jenusan | J/Skandavarodaya College | 75 |
| G.Veeshman | J/Manipay Hindu College | 65 |

(C-1675)

தொடர்பு :- 077 017 5346

## 45,000 - 70,000/- உடன்

சவுதி அல் மராய் நிறுவனத்தில் உடனடி

## வேலைவாய்ப்புக்கள்

மேசன், பிளம்பர், காபென்ரர், பெயின்ரர், வெல்டர், டிரைவர், லேபறர், கிளீனர்

விபரங்களுக்கு 0777 324 004

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222 www.tgl.lk

SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS 221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11 www.sikaram.lk

(C-1676)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.